செங்கீரை தலைக்காவுடைய ஐயனார், முன்னோடிக் கருப்பர் கோயில்கள் - ஓர் ஆய்வு

சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் இளம் முனைவர் - தமிழ் (எம்.ஃபில்) பட்டப் படிப்பின் ஒரு பகுதியான ஆய்வேட்டுத்திட்டப் பாடப் பகுதிக்காக அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்

இராம. வேலப்பன்

சேர்க்கை எண் : 06MTL11900014

ஆய்வு நெறியாளர்

முனைவர் **மு. பழனியப்பன்,** எம்.ஏ.,எம்ஃபில்.,பி.எட்.,பிஎச்.டி.,

முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை,

மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி (தன்னாட்சி),

புதுக்கோட்டை - 622 001.

ஜினியஸ் எஜிகேசனல் ட்ரஸ்ட் (மைய எண் : 1190)

பெரியார் பல்கலைக்கழகம் தொலைதூரக் கல்வி இயக்ககம்

சேலம்.

2007

PDF processed with CutePDF evaluation edition www.CutePDF.com

இராம.வேலப்பன்

எண்: 6MTL 11900014

எம். பில் பட்ட ஆய்வாளர்,

தமிழ்துறை,

பெரியார் பல்கலைக்கழகம்,(தொலைக்கல்வி)

சேலம்.

ஆய்வாளர் உறுதிமொழி

முதுநிலை இளம் முனைவர் (தமிழ் இலக்கியம்) பட்டத்திற்கான தேர்வின் ஒரு பகுதியாக விளங்கும் திட்டக் கட்டுரைப் பணிக்காக அளிக்கப்படும் "செங்கீரை தலைக்காவுடைய ஐயனார், முன்னோடிக் கருப்பர் கோயில்கள் ஓர் ஆய்வு" என்னும் தலைப்பிலான இவ்வாய்வேடு என் சொந்த முயற்சியால் உருவாக்கப் பெற்றது என்றும் இதற்கு முன் இந்த ஆய்வேடு வேறு எந்தப் பட்டத்திற்காகவும் அளிக்கப் படவில்லை என்றும் உறுதியளிக்கின்றேன்.

இராம. வேலப்பன்
ஆய்வாளர் கையொப்பம்

நெறியாளர் கையொப்பம்

முனைவா மு. பழனியப்பன்
எம்.ஏ.,எம்.பில்.,பிஎச்.டி.,பி.எட்.,பிஜிடிசிஏ
தமிழ்விரிவுரையாளா,
மா.மன்னர் கல்லூரி (தன்னாட்சி)
புதுக்கோட்டை - 622 001

நாள்: 4/10/07

இடம்: புதுக்கோட்டை

நன்றியுரை

ஆய்வு செய்வதற்கு வாய்பளித்த பெரியார் பல்கலைக் கழகத்திற்கும், ஆய்வு நெறியாளர் புதுக்கோட்டை மா.மன்னர் கல்லூரி முதுநிலை விரிவுரையாளர் மு.பழனியப்பன் அவர்களுக்கும், பெரியார் பல்கலைக்கழகத்தை புதுக்கோட்டை மையமாக வைத்து நடத்தி வரும் திரு.ரவிச்சந்திரன் அவர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

களஆய்வின் போது தேவையான தகவல்களை கூறி உதவியை தகவலாளிகள் திரு.கருப்பையா திருமதி.பிச்சையம்மாள். திரு.வெள்ளைசாமி, திரு.கும.வள்ளியப்பன், திரு.மு.ரெங்கசாமிவேளார், A.R. வடிவேலன், அரிமழம் சிமு.நா.முத்துவீரப்பன்(எ)சீனிவாசன், திரு.பழ.வேலப்பன், திரு.சுப.நாகப்பன் உள்ளிட்ட அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கோள்கிறேன். கோயிலின் அமைப்பு பற்றிய செய்தியினைத் தந்து உதவிய திரு.கருப்பையா (செட்டிபட்டி) மற்றும் திரு.ரெங்கசாமிவேளார், திரு. A.R. வடிவேலன் அவர்களுக்கு என்றும் என்நன்றி உரியது.

இக்கோயில் ஆய்விற்கும் நகர்த்தார்கள் வழிபாட்டுமுறைக்கும் சான்று பெறுவதற்கு நூல்கள் தந்து மற்றும் சுப..நாகப்பன், மற்றும் வே. இராமசாமி ஆகியோர்க்கும் என் நன்றி என்றும் உரியது.

இராம.வேலப்பன்

எண்: 6MTL 11900014

எம். பில் பட்ட ஆய்வாளர்,

தமிழ்துறை,

பெரியார் பல்கலைக்கழகம்,(தொலைக்கல்வி)

சேலம்.

ஆய்வாளர் உறுதிமொழி

முதுநிலை இளம் முனைவர் (தமிழ் இலக்கியம்) பட்டத்திற்கான தேர்வின் ஒரு பகுதியாக விளங்கும் திட்டக் கட்டுரைப் பணிக்காக அளிக்கப்படும் "செங்கீரை தலைக்காவுடைய ஐயனார், முன்னோடிக் கருப்பர் கோயில்கள் ஓர் ஆய்வு" என்னும் தலைப்பிலான இவ்வாய்வேடு என் சொந்த முயற்சியால் உருவாக்கப் பெற்றது என்றும் இதற்கு முன் இந்த ஆய்வேடு வேறு எந்தப் பட்டத்திற்காகவும் அளிக்கப் படவில்லை என்றும் உறுதியளிக்கின்றேன்.

இராம. வேலப்பன்

ஆய்வாளர் கையொப்பம்

நெறியாளர் கையொப்பம்

முனைவர் மு. பழனியப்பன்,
எம்.ஏ.,எம்.பில்.,பிஎச்.டி.,பி.எட்.,பிஜிடிசிஏ
தமிழ்விரிவுரையாளர்,
மா.மன்னர் கல்லூரி (தன்னாட்சி)
புதுக்கோட்டை - 622 001

நாள்: 4/10/07

இடம்: புதுக்கோட்டை

ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே சான்றோன் ஆக்குதல் தந்தைக்கு கடனே என்னும் பொன்மொழிகளுக்கேற்ப என்னை படிக்கவைத்து நல்ல நிலைமைக்கு உயர்த்திய எனது பெற்றோர் திரு.ராம.வே.இராமசாமி, திருமதி இராம.தெய்வானை அவர்களுக்கும் மற்றும் எனது நெருங்கிய நண்பர்களுக்கம் என் நன்றி என்றேன்றும் உரியது. இவ்வாய்வு செய்ய உதவிய மனைவி திருமதி எஸ். பி உமையாள், மற்றும் குழந்தைகள் செல்வன் வே. இராமசாமி, செல்வன வே. சுப்பு ஆகியோருக்கும் நன்றிகள்.

இவ்வாய்வேட்டிற்கு தேவையான புகைப்பட நகல்களை சேகரித்து கொடுத்து உதவிய பல்வான்குடி கும.வள்ளியப்பன் அவர்களுக்கும் எனது நன்றி.

இவ்வாய்வேட்டை நன்முறையில் கணிப்பொறி அச்சில் உருவாக்கியவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றியுடன்,

<u>பொருளடக்கம்</u>

முன்னுரை

இயல்1. அறிமுகம்

இயல்2. கோயில் வரலாறு

இயல்3. கோயிலில் உள்ள தெய்வங்களும் வழிபாட்டு முறையும்.

முடிவுகள்

பின்னிணைப்புகள்

துணைநூற்பட்டியல்

முன்னுரை

இந்திய நாடு என்பது பண்பாடு, கலை, இலக்கியம், மொழி, மக்கள், சமயம் முதலிய பல்வேறு துறைகளில் புகழ் பெற்று விளங்குகிறது. அதிலும் குறிப்பாக தமிழகம் தெய்வத் தலங்கள் பலவற்றைக் கொண்டு இந்திய மாநிலங்களில் தமிழகம் தனிப்பெரும் இடத்தை பெற்று விளங்குகிறது. தமிழர்களின் கலை வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்குவன கோயில்கள் ஆகும். இக்கோயில்களைத் தமிழர்கள் ஒரு கலை வளர்க்கும் நிறுவனமாகவே கண்டு வளர்த்துள்ளனர். தமிழ் நாட்டுக் கோயில்கள் பண்பாட்டின் இருப்பிடமாகவும், கலைகளின் உறைவிடமாகவும் திகழ்வன ஆகும். அவ்வகையில் பலஅரிய கோயில்களைத் தமிழகம் பெற்றுள்ளது.

தலைக்காவுடைய ஐயனார் மற்றும் முன்னோடிக் கருப்பர், பெரியகருப்பர் என்ற கோயிலகள் புதுக்கோட்டை மாவட்டத்தில் செங்கீரை என்ற கிராமத்தில் அமைந்துள்ளன. இக்கோயில் செங்கீரை மக்களும் மற்றும் செட்டிநாடு மக்கள் என்று அழைக்கக்கூடிய நகர்த்தார்கள் போன்றவர்களின் நம்பிக்கை பெற்ற கோயிலாகும். இக்கோயிலின் வரலாறு, வழிபாட்டுமுறை முதலானவற்றை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

ஆய்வுத் தலைப்பு அறிமுகம்

செங்கீரை தலைக்காவுடைய ஐய்னார், முன்னோடிக் கருப்பர் கோயில்கள் ஓர் ஆய்வு என்பது இவ்வாய்வின் தலைப்பாக அமைந்துள்ளது. தலைக்காவுடைய ஐயனார், பெரிய கருப்பர், முன்னோடிக் கருப்பர் ஆகிய சிறு தெய்வங்களுக்கான கோயில்கள் இந்த ஊரில் உள்ளன.

இக்கோயில்கள் பழமை வாய்ந்தன. மக்களின் நம்பிக்கைகளுக்கு உறைவிடமாகத் திகழ்வன. சிறு தெய்வ வழிபாடு என்பது பெரும்பாலும் துடியான தெய்வங்களுக்கு உரியதாகும். இத்தெய்வங்களின் வழிபாடு என்பது அப்பகுதி மக்களின் பண்பாடு, வாழ்க்கை முறை சார்ந்ததாகும். இவற்றை ஆராய்வதன் மூலம் வெளிச்சத்திற்கு வராத மக்கள் வாழ்க்கை முறைகள் தெரியவரும். இவ்வகையில் இவ்வாய்வின் தலைப்பு அமைக்கப் பெற்றுள்ளது.

ஆய்வு அணுகுமுறை:

இவ்வாய்வு களஆய்வு முறையில் அமைந்துள்ளதாகும். களத்திற்கு நேரடியாகச் சென்று அங்குள்ள தகவல்களைத் திரட்டி தொகுத்து இவ்வாய்வு செய்யப்பெற்றுள்ளது.

ஆய்வு எல்லை

இவ்வாய்வு புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள செங்கீரை என்னும் ஊரில் அமைந்துள்ள தலைக்காவுடைய ஐயனார், கருப்பர், முன்னோடிக் கருப்பர் ஆகிய தெய்வக்கோயில்களை மட்டும் ஆய்வு எல்லையாகக் கொண்டுள்ளது.

ஆய்வு பகுப்புகள்:

இவ்வாய்வு முன்னுரை முடிவுரை நீங்கலாக மூன்று இயல்களைக் கொண்டுள்ளது.

முன்னுரை:

முன்னுரையான இவ்வியல் ஆய்வின் நோக்கம், ஆய்வு எல்லை, ஆய்வின் பாகுபாடு முதலான பல செய்திகள் எடுத்துரைக்கப் பெறுகின்றன.

அறிமுகம்:

முதல் இயலான இவ்வியல் புதுக்கோட்டை மாவட்டம், செங்கீரை கிராமம் மற்றும் அதன் கோயில்கள் ஆகியன சுருக்கமான முறையில் எடுத்துக் காட்டப் பெறுகின்றன. மேலும் இக்கோயில்களின் அமைப்பு முறை மற்றும் வணங்கும் மக்களின் அறிமுகம் ஆகியனவும் இதனுள் தரப் பெற்றுள்ளன.

கோயில் வரலாறு:

இவ்வியல் கோயிலின் வரலாறு குறித்த செய்திகளைச் செவி வழிக் கதைகள் வழியாகவும், வரலாற்றுச் செய்திகள் வழியாகவும் ஒருங்கிணைத்து இவ்வியல் பல செய்திகளைத் தருகின்றது.

கோயிலில் உள்ள தெய்வங்களும் வழிபாட்டுமுறையும்:

இவ்வியலில் தலைக்காவுடைய ஐயனார் மற்றும் கருப்பர் கோயிலில் உள்ள தெய்வங்களும், அவற்றிடம் ஊர் மக்கள் மற்றும் நகரத்தார்கள் கொண்டுள்ள நம்பிக்கைகளும் ஆராயப்பெறுகின்றன. மேலும் கோயில் வழிபாட்டுமுறை, திருவிழா, படைப்பு முறை ஆகியனவும் ஆராயப்பெறுகின்றன.

முடிவுகள்:

இப்பகுதியில் ஆய்வில் கண்டறியப்பட்ட முடிவுகள் தொகுத்துரைக்கபடுகின்றன.

தக்க பின்னிணைப்புகள் இவ்வாய்வின் இறுதிப்பகுதியில் இணைக்கப் பெற்றுள்ளன. மேலும் ஆய்விற்கு உதவிய நூல்களின் பட்டியல் துணை நூற்பட்டியலாகத் தரப்பெற்றுள்ளது.

இயல் - 1

அறிமுகம்

புதுக்கோட்டை பகுதி பாண்டியர், பல்லவர், சோழர், நாயக்கர் என்ற அரச மரபினரால் தொடர்ந்து ஆட்சி செய்யப் பெற்று வந்தது. அதன்பின், கி.பி. ஆயிரத்து அறுநூற்று நாற்பதாம் ஆண்டு முதல் தொண்டைமான் மன்னர்களின் முடியாட்சியில் புதுக்கோட்டைத் தனியரசு சுமார் முன்னூறு ஆண்டுகள் இருந்தது.

இந்தியா விடுதலை அடைந்த பின்னர் புதுக்கோட்டைத் தனி அரசு ஒன்றுபட்ட இந்தியாவுடன் 03.03.1948 அன்று இணைக்கப்பட்டது. அதன் பின்னர் திருச்சி மாவட்டத்தில் ஒரு வருவாய்க் கோட்டமாக புதுக்கோட்டை விளங்கி வந்தது

புதுக்கோட்டையின் தனிச்சிறப்பையும், வளர்ச்சியையும் கருத்தில கொண்டு நிர்வாக வசதிக்காக 14.01.1974 ஆம் நாளில் புதுக்கோட்டை மாவட்டம் உருவாக்கப்பட்டது.

இம்மாவட்டத்தில் பல்வேறு வகையான சிறப்புகள் அமைந்திருக்கின்றன. சுமார் நான்காயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு சிறந்து விளங்கிய பெருங்கற்கால மக்களின் வாழ்க்கை மற்றும் நாகரீகம் காட்டும் வரலாற்றுச் சான்றுகள் ஆங்காங்கே கிடைத்துள்ளன.

தமிழகத்தின் பழங்கால வரலாற்றுக்குச் சான்றான பல கல்வெட்டுகள் இங்குக் கிடைத்து உள்ளன. இசை வரலாற்றிலும் புதுக்கோட்டைக்குத் தனிச்சிறப்பு உண்டு. இயல், இசை, நாடகங்களை வளர்க்கப் புதுக்கோட்டை மாவட்ட கலைஞர்கள் பாடுபட்டுள்ளனர். பாடுபட்டும் வருகின்றனர். மேலும் இங்குப் பழங்காலக் கோயில்கள், திருத்தலங்கள் நிறைந்து காணப்படுகிறன்றன.

ஓவியத்திற்குச் சிறந்த சித்தன்னவாசல், கட்டடக் கலைக்குச் சிறப்பாக விளங்கும் கொடும்பாளூர் மூவர் கோயில், பல கற்களை இணைத்து அமைக்கப்பட்ட சிற்பக்கலை நேர்த்திக்கு சான்று கூறும் ஆவுடையார்கோவில், பாதுகாப்பான இடத்திற்குச் சான்றாக விளங்கும் திருமயம் கோட்டை, தெய்வ மணம் பரப்பும் பிரகதாம்பாள் ஆலயம், புவனேஸ்வரி ஆலயம், பொற்பனைக்கோட்டை முனீஸ்வரன் ஆலயம் போன்ற வரலாற்று நினைவுச் சின்னங்களும், எண்ணற்ற கோயில்களும் நிறைந்து காணப்படும் மாவட்டம் இதுவாகும்.

இந்தியாவிலேயே முதன்முதலில் ஒரு பெண் ஆதினமாகப் பொறுப்பேற்று திலகவதியார் தெய்வத் திருவருள் ஆதீனம் என்பதைத் தோற்றுவித்த சாயிமாதா சிவபிருந்ததேவி வாழ்ந்த இடமும் புதுக்கோட்டை ஆகும்.

சமயப் பணியிலும், சமுதாயப் பணியிலும் சிறந்த மாவட்டமாக இப்புதுக்கோட்டை மாவட்டம் விளங்குகிறது. இம்மாவட்டத்தில் அமைந்துள்ளது செங்கீரை என்னும் கிராமம் ஆகும். இந்த ஊரில் உள்ள ஐயனார் கோவில், பெரியகருப்பர், முன்னோடிக் கருப்பர் ஆகிய தெய்வங்களின் கோயில்கள் இவ்வாய்வின் களம் என்பதால் அதன் அறிமுகமும் தேவைப்படுவதாகின்றது.

செங்கீரை ஊர் அறிமுகம்

இம்மாவட்டம் பல சிறு தெய்வங்களுக்கும் அதன் வழிபாட்டு முறைக்கும் உரிய மாவட்டமாக உள்ளது. இந்த புதுக்கோட்டை மாவட்டத்தில் செங்கீரை என்ற கிராமம் உள்ளது. இக்கிராமம் புதுக்கோட்டையில் இருந்து சுமார் பதினைந்து கிலோ மீட்டர் தொலைவிலும் திருமயத்தில் இருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவிலும், அரிமளத்தில் இருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. இவ்வூரில் உள்ள சிறுதெய்வங்கள் தலைக்காவுடைய ஐயனார், பெரியகருப்பர், முன்னோடிக்கருப்பா் ஆகியனவாகும். இவர்கள் உறையும் கோயில்கள் பற்றி அறிமுகம் செய்வதாக இவ்வியல் அமைகிறது.

ஐயனார் கோயில் அறிமுகம்

செங்கீரை என்ற கிராமத்தில தலைக்காவுடைய ஐயனார் கோயில், முன்னோடிக் கருப்பர் கோயில் ஆகியன அமைந்து தெய்வ மணம் பரப்பி வருகின்றன.

இக்கோயில் சுமார் 200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றும், பழமை வாய்ந்த கோயில் என்றும் கூறப்படுகிறது. அதற்குச் சான்றாக இக்கோயில்கள் பழமைப் பொலிவுடன் விளங்குகின்றன.

தலைக்காவுடை ஐயனார் கோவிலின் அமைப்பு

தலைக்காவுடை ஐயனார் சிறு தேய்வம் என்ற போதிலும் அவருக்கென வரையறுக்கப்பட்ட ஒரு கோயில் அமைப்பு முறை உள்ளது.அது பின்வருமாறு.

நுழைவுவாயிலின் மேலே உள்ள சிறிய கோபுர அமைப்பில் ஐயனார் நடுவிலும், தேவியர் இருபுறமும் தனித்தனி மாடங்களில் சுதையில் அமைக்கப் பெற்றிருப்பது அழகாக உள்ளது.

உள்ளே நுழைந்ததும் முதலில் ஓர் ஓட்டுக்கூடம் உள்ளது. அதையடுத்து மகாமண்டபம், கருவறை ஆகியவை முழுமையாகக் கல்திருப்பணியால் செய்யப்பெற்றுள்ளன.

வெளியில் உள்ள யானை வாகனம், பலிபீடம் ஆகியவற்றைக் கடந்து சென்றால், கருவறை தென்படுகிறது. கருவறை வாயிலின் இருபுறமும் துவார பாலகர் உள்ளனர். அர்த்த மண்டபத்தில் ஐயனாரின் வலப்புறம் விநாயகர் பெருமான் காட்சியளிக்கின்றார். கருவறையில் தேவியர் புடைசூழத் தலைக்காவுடைய ஐயனார் அமர்ந்திருக்கிறார்.

இக்கோயில் தவிர கிராமத்தின் வடபுறத்தில் உள்ள பெரிய ஊருணியின் வடகரையில், முன்னோடிக் கருப்பர் கோயில் உள்ளது.

மேற்கண்ட இரண்டுமே நகரத்தார்கள் என்று அழைக்கப்படும் செட்டிநாட்டு மக்கள் வழிபடும் குலதெய்வக் கோயில்கள் ஆகும்.. மேற்கண்ட இரு கோயில்களையும் அவ்வூர் மக்கள் தங்கள் காவல் தெய்வக் கோயில்களாகக் கொண்டும் வணங்கி வருகின்றனர்.

கோவிலின் முன்புறத்தில் 02.12.1917ஆம் நாளில் கட்டப்பெற்ற இரு சேமங்குதிரைகள் எதிரும் புதிருமாக அமைந்து உள்ளன. பூதங்களின் தோள்களில் முன் கால்களை ஊன்றி நிற்கும் வகையில் இரு குதிரைகளுமே புதிதாக வண்ணத்துடன் காக்கப் பெற்று வருகின்றன.

கோயிலின் சுற்றுப்புறம்

இக்கோயிலைச் சுற்றி, கோயிலின் முன்புறம் சேமங்குதிரை இரு பக்கங்களிலும் காட்சியளிக்கிறது. கோவிலின் இடப்புறம் ஓர் மரத்தின் கீழ் மூன்று கற்கள் உள்ளன. அவற்றில் நடுவில் உள்ளது காளி வலப்புறம் நொண்டி அப்பச்சி, இடப்புறம் முனி போன்ற தெய்வங்களாகக் கொள்ளத்தக்கன.

இக்கோவிலில் மடப்பள்ளி என்ற ஒன்று இல்லை. இங்கு உணவு செய்யும்போது வெளிப்புறத்தில் அடுப்பை போட்டு பயன்படுத்துவார்கள். நகரத்தார்கள் பொங்கல் வைப்பதற்கும், படைப்பதற்கும். கோயிலின் உட்புறத்தில் சின்னகருப்பர், பெரியகருப்பர் இருக்கும் இடங்களின் முன்பாக மூன்று அடுப்புகள் வைக்கப்பட்டுள்ளன.

கோவிலின் உட்புறத்தில் இடப்புறமாக ஓர் கிணறு உள்ளது. இக்கிணறு நகரத்தார் ஒருவரால் கட்டிக் கொடுக்கப்பட்டதாக வாய்மொழித் தகவல்கள் சான்று பகர்கின்றன.

இவ்வாறு இக்கோயில் தனக்கென ஒரு வடிவமைப்புடன் அமைந்துள்ளது.

முன்னோடிக் கருப்பர் திருக்கோயில்

தலைக்காவுடைய ஐயனாரை வழிபட்டுக் கொண்டு, அக்கோயிலின் பின்புறமாக மேற்கு நோக்கி அமைந்துள்ள முன்னோடிக் கருப்பர் கோயிலுக்குச் சென்று வணங்குவது மக்கள் வணங்கும் முறை ஆகும்.

03.11.1989ஆம் நாளில் இக்கோயிலுக்குத் திருக்குட நீராட்டு நடைபெற்று இருக்கிறது. கோயிலின் முன் உள்ள ஒற்றைக்குதிரை, புத்தொளியுடன் நிகழ்கிறது. இரு பூதங்கள் முறையே இட- வலக் கரங்களை உயர்த்தியிருக்க அவற்றில் தன் முன்னங்கால்களை வைத்துக்கொண்டு கனைப்பொலியுடன் புறப்பட ஆயத்தமாக நிலையில் அமைந்திருக்கிறது இக்குதிரை.

கோயிலின் முன்புறமும், ஊருணியை ஒட்டியும், இரு நீண்ட கூடங்கள் உள்ளன.

இக்கோயிலின் நுழைவு வாயில் 2005ஆம் ஆண்டில் குடமுழுக்கு நடைபெற்றபோது அமைக்கப்பெற்றது. தார்ச்சாலையில் இருந்து பார்க்கின்றபோது, அந்த நுழைவுவாயில் அற்புதமாக அமைக்கப்பெற்றுள்ளமை தெரியவரும்.

மேலும், ஏற்கனவே இருந்த ஒரு ஓட்டுக் கூடத்திற்கு மேல் கோவிலின் வடபுறத்தில் ஓர் கூடம் அமைக்கப்பெற்றுள்ளது. இரு கூடங்களுக்கு இடையில் சேமங்குதிரை புதுப்பொலிவுடன் காட்சியளிக்கிறது. கூடங்களைச் சுற்றிக் கருங்கல் ஊன்றப்பட்டு, கம்பிவேலி போடப்பட்டுள்ளது.

மூலவர் 'முழுநகு அழலாய் நிமிர்ந்த' முன்னோடிக் கருப்பர் ஆவார். இவரின் உருவம் பெரிய திருவுருவம் ஆகும். அழகிய இச்சிலைக்கு அருகில் மூவிலைச் சூலம் அமைக்கப் பெற்றுள்ளது.

இவருக்கு அன்றாடம் அபிடேகம் கிடையாது. உயிர்ப் பலி கொடுத்து உபயம் செய்தால் மட்டுமே அபிடேகம் நடைபெறும். மற்ற நாட்களில் மாலைகளைக் கூட அகற்றுவதில்லை. சாம்பிராணி போட்டு தீபம் காட்டப் பெறுகின்றது.

இக்கோவிலின் வலப்புறத்தில் ஊரணி ஒன்று உள்ளது. அதனின் பெயர் நல்லபிள்ளை பெற்றாள் ஊரணி ஆகும். இதன் நீர் பூசை செய்வதற்காக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், இவ்வூரணி வற்றாதது.. இவ்வூர் மக்களுக்கும், அருகாமையில் உள்ள ராயவரம் மற்றும் சிறு கிராமங்களுக்கும் இந்நீர் குடிநீராகப் பயன்படுகிறது.

கோயிலின் முன்புறம் நுழைவுவாயில் ஒன்று அமைக்கப்பெற்று அதில் சில வேலைப்பாடுகள் செய்யப்பெற்றுள்ளன.

இவ்வாறு கிராமச் சூழல் கொண்ட அமைப்பில் தலைக்காவுடை ஐயனார் மற்றும் முன்னோடிக்கருப்பர் ஆலயங்கள் அமைந்துள்ளன.

பெரிய கருப்பர்

தலைக்காவுடைய ஐயனார் கோயிலில் பெரிய கருப்பர் என்ற தெய்வம் உள்ளது. இத்தெய்வம் ஏழூர் நகரத்தார்களுக்குக் குலதெய்வமாக விளங்கி வருகிறது.

நகரத்தார்கள் என்று அழைக்கப்படும் செட்டி நாட்டு மக்கள் புதுக்கோட்டை மாவட்டத்திலும், சிவகங்கை மாவட்டத்திலும் உள்ள சில ஊர்களில் பெருகி வாழும் குலத்தினர் ஆவர். இவர்கள் காஞ்சிபுரத்தில் வாழ்ந்து, அதன்பின் காவிரிப்பூம்பட்டிணம் வந்து பின் மதுரை அதனைத் தொடர்ந்து இந்தப் பகுதிகளுக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

இவர்கள் நகரப் புகுதிகளில் நாகரீகத்துடன வாழ்ந்து வந்ததால் நகரத்தார்கள் எனப்பட்டனர். மேலும் இவர்கள் தங்களுக்காக ஒன்பது கோயில்களைப் பெற்று அக்கோயில் சார்ந்த குடிகளாக வாழ்ந்து

வருவோர் ஆவர். பாண்டிய மன்னர்களிடம் வேண்டிப் பெற்ற வயிரவன் பட்டி, நேமம், இளையாற்றங்குடி, பிள்ளையார்பட்டி, வேலங்குடி, இரணியூர், சூரக்குடி, மாத்தூர், இலுப்பைக்குடி என்ற ஒன்பது கோயில்கள் அடிப்படையில் இவர்கள் தம் குலமரபை அமைத்துக் கொண்டுள்ளனர். அவர்களுள் வயிரவன்பட்டி சார்ந்த பெரிய கோயில் பிரிவனருக்குச் செங்கீரைக் கருப்பர் குலதெய்வமாக உள்ளார்.

குறிப்பாக பலவான்குடி, அரிமழம், நேமத்தான்பட்டி, நாச்சியாபுரம், சிராவயல், கொத்தமங்கலமத் தேவகோட்டை போன்ற ஏழூர் நகரத்தார்கள் மட்டும் இந்தக் கருப்பரைக் குலதெய்வமாக வழிபடுகின்றனர். இவ்வேழு ஊர்களில் வயிரன்பட்டி பெரிய கோயில் பிரிவனர் வாழ்ந்து வருகின்றனர்.

ஒவ்வோர் ஆண்டும்' ஆடிமாதம் முதல் வெள்ளிக்கிழமை, அல்லது நான்காம் வெள்ளிக்கிழமையன்று பலவான்குடி, நேமத்தான்பட்டி, கொத்தமங்கலம், நாச்சியாபுரம், சிராவயல் பங்காளிகள் ஒன்றுகூடி கருப்பருக்குப் பூசை நடத்துவார்கள்.

அதுபோல அரிமழம், நேமத்தான்பட்டி, மாத்தூர் அரும்பாக்கூர் பிரிவு கோவிலைச் சார்ந்த நகரத்தார்கள் கருப்பருக்கு பூசை கொண்டாடுவார்கள். இவர்கள் ஆண்டு தோறும் ஆடிமாதம்

இரண்டாவது வெள்ளிக்கிழமையன்று அனைத்து பங்காளிகளும் ஒன்று கூடி வழிபாடு செய்வார்கள்.

மற்றும் ஊர்மக்கள் இந்த ஐயனாருக்கும், கருப்பருக்கும் புரவி எடுத்தல் என்ற விழாவை மிகச் சிறப்பாக வைகாசி கடைசி (அல்லது) ஆனி முதல் வாரத்தில் எடுப்பர். இந்த இரு தெய்வங்களுக்கும் குதிரை எடுத்து சிறப்பு வழிபாட்டை மக்கள் செய்வார்கள்.

<u>வழிபாட்டுப்பாடல்கள்</u>

"போற்றும் தலைக் காவுடை கோண்டருள்புரி யும்ஜயனாரே,
புகழுமே சேங்கீரைநகர் மக்கள் மெய்யனே
ஆற்றும் அருள், செட்டிமக்கள் வணங்கும் ஐயனாரே,
அகலுமே இருள், அடியோடனைத் தும்மே நாளும்.

காற்றும்கன லுமாய்நின்றே கண்இமை காத்து
காற்றுகருப் புகன்னேறிகா லடிஉயிர் சேர்த்து
மாற்றும்மகத் துவமேமுனியும் ஆவார்
மகிழவேசுகள் மன்னர்மக் கனினியும் நோவார்

தண்ணீரில் விளக்குளரியும் தலைக்காவுடைய ஐயனாரே
என்றும் அருள் பாலிப்பாய் இம்மக்களுக்கு "

என்ற பாடலும் இவரின் அருள்தன்மையைக் காட்டும் பாடலாகும். இப்பாடல் தண்ணீரில் விளக்கு எறித்த முறைமையைச் சுட்டிக் காட்டுகிறது.

அதைப்போலவே, கருப்பர் ஆகிய கடவுளரைப் பற்றிய பாடல்களும் பல உள்ளன. எடுத்துக்காட்டாக ஒரு சில பாடல்கள் பின்வருமாறு.

கீழ்க்கண்ட பாடல்களை எழுதியவர் பலவான்குடிப் புலவர் வேலப்பனார் ஆவார். இவர் பெரியகருப்பண்ணசாமி மேல் அந்தாதிப் பதிகம், தமிழ்மலர்ப் போற்றிகள் நூற்றி எட்டு போன்ற பனுவல்களை உருவாக்கியுள்ளார். அந்நூலினைப் படிக்கின்ற போது தொல்காப்பியர் குறிப்பிடும் வழிபடு தேய்வம் என்பது குலதெய்வ வழிபாடு ஆகும். குலதெய்வ வழிபாடு தொல்காப்பியர் காலத்திலேயே இருந்தமை பெறப் பெறும்

“வழிபடும் தெய்வம் நின்புறம் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்றும் புறநிலை வாழ்த்தே”

என்பது தொல்காப்பியம்.

சிலப்பதிகாரத்தில் கோவலனுக்குக் குலதெய்வமாக மணிமேகலா தெய்வம் சுட்டப்பெறுகிறது. அவ்வழியில் இப்பாடல் குலதெய்வத்தை வணங்கும் பாடலாக உள்ளது.

1. வாரார் ஐயா வாராரு
   கருப்பர் இங்கே வாராரு
   சீரார் ஐம்பொன் சிலைஅழகாய்
   நேராய் இங்கே வாராரு
   - வாரார்

2. ஆண்டுதோறும் ஆடிமாதம்
   வளர்பிறையின் வெள்ளியில்
   நீண்டு உயர்ந்த முன்னோடிக்
   கருப்பர் வாழும் செங்கீரை
   - வாரார்

3. அழுந்தும் பயிர்கள் உயர்களெல்லாம்
   ஆனந்தம் தாம் கொண்டிடவே
   எழுந்து(உ) வந்து காத்திடவே
   காவல் தெய்வம் ஆகித்தான்
   - வாரார்

4. கையில் வாளின் ஒளியினோடும்

காலில் தண்டை ஒலியினோடும்

மெய்யில் மீசை ஆசையோடு

பூசை கொள்ள வாராரு

- வாரார்

5. இளமைப் பருவம் செல்வாக

இன்பப் பொருளும் வரவாக

வளமை முதுமை இருப்பாகப்

பழமைக் கருப்பர் பொறுப்பாகி

- வாரார்

6. பெரிய கருப்பர் காட்டுகின்ற

உரிய நல்ல வழி அறிந்து

பிரிவை அறிவை ஊசிநூலாய்ப்

பின் தொடர்ந்து செல்வோமே.

இப்பாடலில் இவ்வூரின் மூன்று தெய்வங்களும் பெருமைபடப் பாராட்டப் பெற்றுள்ளது. இத்தெய்வங்கள் பற்றியக் குறிப்பில்

அவற்றின் அருள் தன்மையும், காத்தல் தன்மையும் சுட்டிக் காட்டப் பெற்றுள்ளன.

1. உலகம் முழுவதும் தெய்வங்களும்
திலகம் போன்றவர் பெரிய கருப்பர்!
காரணம் பதினாறும்
பூரணமாகத் தருவதுதான்
ஆதலால் நாம் எல்லாம்
காதல் ஆகிப் போற்றுவமே!

2. அயன்அரி திருமால் முருகன் முதலா
கயமுகன் அனைவரும் ஒன்றாய் இணைந்தே
இருள் கெட உலகின் எழுந்தாற்போல்
சுருள் ஒளி தரவே கருப்பரும் வந்தார்
- ஆதலால்

3. "கல்விக் அழகு கசடற மொழிதல்
செல்வர்க் அழகு சேழுங்கிளை தாங்குதல்"
உழவர்க் அழகோ நன்நெல் விதைத்தல்
புலவர்கக் அழகோ இன்சொல் விதைத்தல்
கருப்பர் அழகோ விருப்புடன் நம்மை
இருப்புடன் வைத்தே பொறுப்புடன் காத்தல்

- ஆதலால்

4. மனைவி மக்கள் பேரன் பேத்தி
மருமக் கள்தாம் ஒற்றுமையோடு
துணையாம் கருப்பர் திருவடி போற்றி
இணையும் நாளே திருநாள் ஆகும்

- ஆதலால்

5. வணங்க மறுத்தால் இணங்க மறுப்பான்
வாழ்க்கை எப்படி சுகமாய் அமையும்?
சுணங்காமல் அவன் திருவடி வீழ்க!
தூய்மை இல்லறம் நல்லறம் சூழ்க!

- ஆதலால்

6. நாச்சியார்புரம் நேமத்தான்பட்டியும்
கொத்தமங்கலம் சிறாவய லோடும்
தேவகோட்டை கோ.அளகாபுரி
பலவான்குடியுடன் ஏழூர் ஆகிச்
சேர்ந்து படைக்கும் திருநாள் இந்நாள்
ஆர்ந்தருள் வாரே! பெரிய கருப்பர்

- ஆதலால்

மேற்கண்ட பாடல்களைப் போலவே இன்னும் பல பாடல்கள் இத்தெய்வத்திற்கு உண்டு. 'காவடியாங் காவடி' – என்ற பாடல் இசை "ஆடுக ஊஞ்சல் ஆடுகவே" என்ற இசை 'சுட்டதிரு நீரெடுத்து" – என்ற பாடல் இசை ஆகிய மெட்டுக்களிலும் பாடல்கள் இக்கடவுள் வழிபாட்டின்போது பாடப் பெற்று வருகிறது.

இப்பாடல்கள் வழியாக இக்கோயிலை வணங்குவோர், வணங்கப்படும் முறை ஆகியன பெறப்படுகின்றன. குறிப்பாக நகரத்தார் படைப்பின்போது இப்பாடல்கள் பாடப் படுகின்றன. இறுதியில் இடம் பெற்றுள்ள பாடல் கருப்பரின் அருள்தன்மையைப் பாராட்டுகிறது. இவ்வருள் தன்மை மற்றவர்க்கும் கிடைக்க அப்பாடல் வழிகோலுகிறது.

இவ்வகையில் இத்தெய்வங்கள் ஏழூர் நகரத்தார் பெருமக்களாலும், மற்றும் செங்கீரை ஊர் மக்களாலும் வணங்கப் பெற்று வருகிறது. இப்பகுதியல் இதுவே வன்மை மிகு தெய்வமாகவும் விளங்குகின்றது.

முடிவுகள்

- புதுக்கோட்டை மாவட்டம் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மாவட்டம் ஆகும். இம்மாவட்டத்தில் பல வரலாற்றுச் சின்னங்களும், தெய்வக் கோயில்களும் நிறைந்துள்ளன.

- செங்கீரை என்ற கிராமம் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர் ஆகும். இந்த ஊரில் தலைக்காவுடைய ஐயனார் என்ற கடவுளுக்கும், முன்னோடிக் கருப்பருக்கும் கோயில்கள் அமைக்கப் பெற்றுள்ளன. இவை இரண்டோடு மூன்றாவது தெய்வமான கருப்பர் என்ற தெய்வமும் மிகச் சிறந்த தெய்வமாக விளங்குகிறது.

- இக்கோயில்கள் ஏழூர் நகரத்தார் பெருமக்களுக்கும், செங்கீரை ஊர் மக்களுக்கும் உரிய நிலையில் தெய்வத் தொடர்புடையதாக உள்ளது.

- இக்கோயில் சிறுதெய்வ வழிபாட்டு நிலையில் வணங்கப் பெற்றும் போற்றிப் பனுவல்கள் அமைக்கப் பெற்றும் விளங்குகிறது.

இயல் - 2

கோயில்களின் வரலாறு

சிறுதெய்வங்களின் வரலாறு என்பது பெரும்பாலும் வாய்மொழிக்கதைகளாகவே இருக்கும். அவற்றை வணங்கி வரும் மக்கள் பல கதைகளை அத்தெய்வங்கள் குறித்து வழங்கி வருவது என்பது இயல்பாகும். இந்நிலை செங்கீரை கிராமத்தில் அமைந்துள்ள தெய்வங்களுக்கும் உரியதாக உள்ளது,

செங்கீரை ஊர் வரலாறு

செங்கீரை என்ற ஊர் தோன்றியமை குறித்து ஒரு வாய்மொழி வரலாறு வழங்கிவருகிறது.

" இவ்வூரில் காடுகள் அதிகம், அய்யனார் கோவிலின் இடப்பக்கமும், முன்னோடிக் கருப்பரின் வலப்பக்கமும் அக்காலத்தில் காடுகள் இருந்திருக்கின்றன.. அந்தக் காட்டிற்கு நடுவில் கோவிலில் இருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் காவிக்குழி என்ற மண்மேடு இருக்கிறது. அது தற்போது அடர்த்தியான முட்களால் புதையுண்டு கிடக்கிறது.

இந்தக் காவிக்குழி பற்றி ஒரு கதை சொல்லப்படுகின்றது. தலைக்காவுடைய ஐயனார் கோயில் பூசாரி இந்தச் செவிவழிக்கதையைக் குறிப்பிடுகிறார்.

மதுரையில் ஒரு பெண்பிள்ளை பிறக்கிறது. அந்தப் பெண்பிள்ளை மதுரையில் இருந்தால் மதுரை அழிந்துவிடும் என்ற கருத்து நிலவியதால் அந்தப் பெண் பிள்ளையைக் கொன்றுவிட முயற்சிகள் நடந்தன.

ஆனால் கொலை செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட மனிதர் அந்தப் பெண்ணைக் கொலை செய்ய மனம் வராமல் செங்கீரைக் காட்டில் விட்டுவிட்டுச் சென்றுவிடுகிறார்.

செங்கீரைக் காட்டுப் பகுதிக்கு வந்த ஒரு குடும்பத்தினர் அப்பெண்ணை எடுத்து வளர்க்கின்றனர். அப்பெண் வளர்கிறாள். அவள் ஒருமுறை இக்காட்டுப் பகுதியில் உலவி வருகிறாள். அப்போது அவள் பூப்பெய்துகிறாள்.

பூப்பெய்திய காரணத்தால் நிலம் முழுவதும் சிவந்த நிறமாகிறது. இவ்விரு கோயில்களின் அருகில் இவ்வாறு நடைபெற்றுவிடுகிறது. அப்பெண் வீடு செல்லும் வரை இந்தச் சிவப்பு நீண்டு கொண்டே போனது.

இறுதியில் அப்பெண் அந்த வீட்டை அடைந்து விட்டாள்.. அப்படிப்பட்ட உதிரம் தான் காவிக்குழி என்று பெரியவர்கள் கூறியதாக

பூசாரி கூறுகிறார்.[1] அதன் பிறகு அப்பெண் பாண்டி நாட்டிற்கு சென்றுவிட்டாள். அந்தக் காவிக்குழியில் இருந்து மண் எடுத்து குழைத்து பானை செய்து விற்று பிழைப்பது தான் அந்த ஊர் மக்களின் தொழிலாக இருந்திருக்கிறது.

இந்தக் காவிக்குழி உண்மைதானா என்று அறிவதற்கு ஓர் அதனுள் ஏழு பேர் சென்றதாகவும், அப்போது மண் பிளவு ஏற்பட்டு அக்குழியில் அவர்கள் புதையுண்டாதகவும் இந்நிகழ்ச்சி தொடர்கிறது.அதன் பிறகு அங்கு எவரும் அங்கு செல்வதில்லை.

தன் நிலை உலகிற்குத் தெரிந்துவிட்டது என்று எண்ணி அந்தப் பெண் இவ்வூரில் இருப்பை விட்டு மதுரைக்குச் செல்கிறாள். இந்தப் பெண்ணே மதுரை மீனாட்சிஅம்மன் என்பதாக ஒரு கதை கூறப்படுகிறது.

ஆகவேதான் மதுரையில் சித்திரை மாதத்தில் நடைபெறும் திருவிழாவின் போது அக்கோயிலில் இருந்து ஒரு காளாஞ்சி செங்கீரை ஊர்க்காரர்களுக்கு கொடுக்கும் நடைமுறை உள்ளது என்று ஒரு சான்றும் காட்டப் படுகிறது. இக்காளஞ்சி தரும் முறை இன்னமும் வழக்கத்தில் உள்ளது,

---

[1] தகவலாளி வெள்ளைச்சாமி வேளார் தந்த் தகவல்

அக்காளாஞ்சியை இவ்வூரைச் சேர்ந்த மதுரையில் வசிக்கும் பரம்பரையினர் வாங்கி வந்து கொண்டு இருக்கிறார்கள் என்று பூசாரியின் கூற்று அமைகின்றது.

இத்தகைய நாட்டுப்புறக் கதையைப் பெற்றதாகச் செங்கீரை என்ற ஊர் உள்ளது.

இதனை மெய்ப்பிப்பதாக மற்றொரு நிகழ்வும் செங்கீரையில் நடைபெற்று வருகிறது.

குதிரை எடுப்புத் திருவிழா நடைபெறும் நேரத்தில் அதற்கு முன்னதாக இவ்வம்மனை நினைவு கூரும் வகையில் ஒரு செயல் நடைபெறுத்தப் படுகிறது.

சிறுவீட்டில் செங்கீரையில் குடியிருந்த அம்மனுக்கு பொங்கல் வைத்து, வழிபடுவது வழக்கமாகும். அது சமயம் அனைத்து மத, இன, மக்களும் மிகவும் கட்டுக்கோப்பாக அசைவ உணவு உண்ணாமல் இருப்பர். மேலும் தீட்டுக் காரியங்களில் ஈடுபடமாட்டனர். அனைவரும் இவ்வம்மனை வணங்குவர். இதன்மூலமும் செங்கீரை என்ற ஊர்ப்பெயர்க்கான சான்று கிடைக்கப் பெறுகிறது.

ஆய்விற்கு எடுத்துக் கொண்ட கோயில்கள் தவிர இவ்வூரில் ஒரு சிவன் கோயிலும் உள்ளது. அதன் அருகில் ஒரு குளமும் உள்ளது. இச்சிவன் கோயில் அம்மனுக்கும் மதுரை மீனாட்சி அம்மனுக்கும் மேற்சொன்ன கதை வழியாகத் தொடர்பு படுத்தப் படுகிறது. இச்சிவன் கோயில் சிவ வழிபாட்டு முறைப்படி வழிபடப் பெற்று வருகிறது.

இதுதவிர பிள்ளைத்தமிழ் இலக்கிய வகைமையில் செங்கீரைப் பருவம் என்ற ஒரு பருவம் இடம் பெறுவது முறை. குழந்தையின் இரண்டாம் பருவம் செங்கீரைப் பருவம் எனப்படுகிறது. அதாவது குழந்தையின் மென்மைத் தன்மையைக் குறிக்கும் இப்பருவம் மேற்சொன்ன கதையின்படி அந்தப் பெண் குழந்தையின் செங்கீரைப் பருவத்தைச் சுட்டியிருக்கலாம். இவ்வடிப்படையில் இவ்வூர் பெயர் பெற்றிருக்கலாம்.

எவ்வாறாயினும் கீழ்க்காணும் பொதுமுடிவுகள் கொள்ளத்தக்கன. அதாவது

- ஒரு பெண் சார்பில் செங்கீரை என்ற ஊர்ப்பெயர் அமைந்துள்ளது.
- இவ்வூருக்கும் இவ்வூரின் நிலத்திற்கும் தொடர்பு ஏற்படுத்தப் பெற்றிருக்கிறது.
- இவ்வூருக்கும் மதுரைக்கும் தொடர்பு ஏற்படுத்தப் பெற்றிருக்கிறது.

இவ்வகையில் இவ்வூரின் வரலாறு அமைகின்றது.

தலைக்காவுடைய ஐயனார், முன்னோடிக் கருப்பர் ஆகிய தெய்வங்களுக்கான கோயில்களும் இவ்வூரில் உள்ளன. அவை பற்றிய வரலாறுகள் பின்வருமாறு.

<u>தலைக்காவுடைய ஐயனார் - பெயர்க்காரணம்</u>

தலைக்காவுடைய ஐயனார் என்பது செங்கீரைப் பகுதி மக்களுக்கு நம்பிக்கையான தெய்வம் ஆகும். இத்தெய்வம் குறித்துப் பல செய்திகள் இப்பகுதிகளில் கூறப்பட்டு வருகின்றன. அவற்றைத் தொகுத்துக் காணுகையில் இக்கோயில் வரலாறு ஓரளவிற்குத் தெரியவருகிறது.

செங்கீரை என்ற ஊர் காட்டுப்பகுதி சார்ந்த ஊராகும். இந்தக் காட்டுப்பகுதியில் இலை, தழைகள் அடர்த்தியாகக் காணப் படுவதால் இங்குள்ள ஐயனாருக்கு தழைக் காவுடைய ஐயனார் என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

தழை + கா உடைய ஐயனார் என்ற நிலையில் இப்பெயரைப் பிரித்துப் பார்த்தால் இப்பெயர்க்காரணம் சரி எனத் தோன்றும்.

தழை என்பதற்கு ,இலை என்று பொருள் கொள்ளலாம். கா என்பதற்கு பின்வரும் பொருள்களைக் கழகத் தமிழ் அகராதி தருகிறது. “ அசைச் சொல், காத்தல், காவடி, காவெண்ணேவல், சோலை, துலை, தோட்சுமை, மலர்த்தோட்டம், வருத்தம், வலி, பாதுகாப்பு ”[2] என்பன அது தரும் பொருள்கள் ஆகும். சோலை என்ற பொருளை இச்சொல்லிற்குப் பொருத்தமாக அமைத்தால் தழைகளால் நிரம்பிய சோலையை உடைய ஐயனார் என்ற பெயர் இவ்வையனாருக்கு ஏற்படுத்தப் பெற்றிருப்பது தெரிய வரும்.

மேற்கண்டது ஒரு வகையில் அமைந்த பெயர்க்காரணம் ஆகும். இது தவிர இன்னும் சில நிலைகளில் இவ்வையனாரின் பெயர்க்கான காரணங்கள் அமைந்ததற்குக் கொள்ளத்தக்கன. அவை பின்வருமாறு.

இங்கு வாழும் மக்களின் தலைகளை காக்கும் தெய்வமாக இருப்பதால், இத்தெய்வம் தலைக்காவுடைய அய்யனார் என்றும் அழைக்கப் பெற்றிருக்கலாம் என்பதும் கொள்ளத்தக்கது. ஏனெனில் கா என்ற சொல்லிற்குக் காத்தல் என்ற பொருளும் உரியதாகும்.

மற்றொரு நிலையில் “தண்ணின்ற தானைத் தலைக் காவல் முன் வைத்து” என்பது திருமூலர் வாக்கு. இறைவனின் இந்தப்

---

[2] கழகத் தமிழ் அகராதி, ப. 315

பேரருட் பண்பையே அய்யனார்க்குப் பெயராக அமைத்து அவரைத் தலைக்காவுடை அய்யனார் என்றும் அழைத்திருக்கலாம் என்பதும் இங்கு கருதத்தக்கது.[3]

இக்கருப்பரின் பெயர்க் காரணம் குறித்து மற்றொரு நிலையிலும் நோக்க வேண்டி உள்ளது. அதாவது தெய்வங்கள் தலைமாடு காக்கும் என்ற நம்பிக்கை மக்களிடம் உண்டு. அவ்வடிப்படையில் தலைமாடு காக்கும் ஐயானர் தலைக்காவுடைய ஐயனார் என அழைக்கப் பெற்றிருக்கலாம் எனக் கொள்ளவும் இடமுண்டு.

இவ்வாறு இவ்வையனார் பெயர் குறித்துப் பல நிலைகளில் கருத்துக்களைப் பெற முடிகிறது. இவற்றில் இருந்து பின்வரும் பொது முடிவைப் பெற முடிகின்றது.

- தலைக்காவுடைய ஐயனார் காவல் காக்கும் திறம் மிக்கவர்.
- அவர் சோலையைக் காத்தாலும் மக்கள் தலைமாடு காத்தாலும் ஆகிய காவல் காக்கும் பொதுவான பண்பைப் பெற்றவர் என்பதில் ஐயமில்லை.

இவ்வகையில் இவ்வையனாரின் பெயர் அமைந்துள்ளது.

---

[3] நகரத்தார்களின் 108 கோயில்கள், ப. 106

தண்ணீரில் விளக்கெரித்த நிகழ்வு

இத்தலைக்காவுடைய ஐயனார் கோயிலில் உள்ள பெரிய கருப்பர் சன்னதியில் தண்ணீரில் விளக்கு எரித்த வரலாறு ஒன்று சுட்டப் பெறுகின்றது. இதற்கான பல வாய்மொழிச் சான்றுகள் இன்னமும் உள்ளன.

பலவான்குடி நகரத்தார்கள் திரு.வே.நாச்சியப்பன், திரு.கும.வள்ளியப்பன் மற்றும் பழ.வேலப்பன் ஆகியோர் குறிப்பிடுகின்றபோது "பழ.வேலப்பன் அவர்களுடைய பெரியப்பா மறைந்த திரு.அருணாசலம் செட்டியார் அவர்கள் தண்ணீரில விளக்கு எரிய வைத்ததாகக்"[4] கூறுகிறார்கள்.

அதைப்போல அய்யனார் கோயிலைப் பராமரித்து வருகின்ற பிச்சையம்மாள் அவர்கள் "என்னுடைய மாமனார் தண்ணீரில் விளக்கு எரியவைத்தார்"[5] என்ற செய்தியைக் குறிப்பிடுகிறார்.

தற்போது அக்கோயிலை பராமரித்துவரும் பங்காளிகளில் ஒரு குடும்பத்தைச் சார்ந்த பெண் ஒருவர் கூற்று மேற்காண் கருத்தை அடியொற்றியே அமைந்துள்ளது.

"நான் திருமணமாகி வாழ்ந்து வந்த போது, என் மாமனர் இக்கோயிலில் உள்ள நல்லபிள்ளை பெற்றாள் ஊரணியில் இருந்து

---

[4] தகவலாளிகள் தந்த தகவல்

[5] தகவலாளிகள் பிச்சையம்மாள் தந்த தகவல்

தண்ணீர் எடுத்த வந்து நீரை ஊற்றி தீ பற்ற வைத்தால் அந்த விளக்கு எரியும். நான் என் கண்ணால் பார்த்து இருக்கிறேன்"[6] என்று கூறுகிறார்.

மேற்காண் கூற்றுகள் மூலம் தண்ணீரில் விளக்கேறித்த முறைமை உண்மை என்பது தெரியவருகிறது. இப்புதுமையை வள்ளலார் செய்ததாக அவரின் வரலாற்றில் இடம் பெறுகிறது. ஏறக்குறைய அதே காலத்தில் இவ்வூரிலும் இதே புதுமை நடைபெற்றிருக்க வேண்டும். இந்நிகழ்ச்சி இக்கடவுளின் பெருமையை மேலும் கூட்டுவதாக உள்ளது.

கோயிலின் பிற தெய்வங்கள்

சிறுதெய்வக் கோயில்களில் பல சுற்று தெய்வங்கள் காணப்படும். இவ்வகையில் இக்கோயிலில் பல தெய்வங்கள் அமைந்துள்ளன. அவை பற்றிய செய்திகள் பின்வருமாறு.

தலைக்காவுடைய ஐயனார் கோயிலில் பல சிறு தெய்வங்கள் உள்ளன. அவை ஒவ்வொரு காரணம் பற்றி அக்கோயிலில் வைக்கப் பெற்றிருக்கலாம். எனினும் இத்தெய்வங்கள் வழிபடும் தெய்வங்களாக மக்களால் போற்றப் படுகின்றன. அவை பற்றிய செய்திகள் பின்வருமாறு.

---

[6] தகவலாளி காளியம்மாள் தந்த தகவல்

இக்கோயிலின் உள்புறத்தில் தெற்கு பக்கமாக சோலைக்கருப்பர் வடக்கு முகம்நோக்கி உள்ளார். அடுத்துச் சின்னகருப்பர் மேற்குமுகமாக உள்ளார்.

இவருக்கு அடுத்த நிலையில் தெற்கு வடக்காக

1. செட்டிச்சியம்மன்,
2. கருப்பாயிஅம்மன்,
3. பேச்சிஅம்மன்,
4. பெரியகருப்பண்ணசுவாமி,
5. அகோர வீரபத்திரசுவாமி
6. அடைக்கலங் காத்தார்

ஆகிய தெய்வங்கள் அமைக்கப் பெற்றுள்ளன.

அய்யனாரின் பின் பகுதியில் சித்திவிநாயகர் கிழக்குமுகம்பார்த்தும், அரசுமுகம், சன்னாசி, கன்னிமார் பெண்கள், தண்டாயுதபாணி ஆகிய தெய்வங்கள் அமைக்கப் பெற்றுள்ளன.

வடக்கு தெற்காக அடைக்கலம் காத்தார் என்ற தெய்வம் அமைந்துள்ளது. இவ்வாறு இக்கோயில் தெய்வங்கள் நிரம்பிய கோயிலாக விளங்குகிறது.

முன்னோடிக் கருப்பர் கோவில்

செங்கீரையில் உள்ள மற்றொரு தெய்வம் முன்னோடிக் கருப்பர் என்ற தெய்வமாகும். இத்தெய்வமும் அருள் வாய்ந்த தெய்வமாகக் கொள்ளப் பெற்று வருகின்றது. அக்கோயில் வரலாறு பற்றிய செய்திகள் பின்வருமாறு.

முன்னோடிக் கருப்பர் தோன்றிய வரலாறு

இந்தக் கருப்பர் தோன்றியமை குறித்து ஒரு வாய் மொழிக்கதை வழங்கப் பெற்று வருகின்றது. அது பின்வருமாறு.

இந்தக் காட்டுப் பகுதியில் பழங்காலத்தில் கோனார் ஒருவர் பால்கரந்து கொண்டு விற்று வருவது வழக்கமாக இருந்தது. அப்படிக் கொண்டு வருகிறபோது தலைக்காவுடைய ஐயனார் கோயில் அருகில் வீரமரம் என்ற ஒரு மரம் இருந்திருக்கிறது.

அந்த மரம் உள்ள இடத்தில் வருகிறபோது நாள்தோறும் பால் கொட்டிவிடும். இதற்கு என்ன காரணம் என்று பலமுறை அவர் யோசனை செய்துள்ளார்.

பின்னர் பூசாரிகளையும், பெரியவர்களையும் கேட்கின்றபோது அவர்கள் இங்கு ஒரு தெய்வம் இருப்பதாகக் குறிப்பு கூறினர்.

அருள் வந்து பூசாரி ஒருவர் “தலைக்காவுடை அய்யனார் கோவிலில் இருக்கின்ற கருப்பர் நான். எனக்கு தனியாக பூசை செய்து வணங்கினால் நான் இந்த இடத்தில் வந்து இருந்து கொள்கின்றேன்”[7] என்று கூறினார். அதுமுதல் இவ்விடத்தில் இத்தெய்வம் வைத்து வணங்கப் பெற்று வருகிறது.

இக்கோயிலும் சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக பராமரிக்கப்பட்டு வருகின்றது. பூசாரியின் நினைவுக்குத் தெரிந்து பழங்காலத்தில் அப்பச்சி சுப்பையா அம்பலம், பெரியய்யா அம்பலம், சுப்பையா அம்பலம் தற்போது கருப்பையா அம்பலம் என்ற வாரிசு தாரர்கள் இக்கோயிலின் பூசாரியாக இருந்திருக்கிறார்கள்.

அப்பச்சி சுப்பையா அம்பலத்திற்கு பிறகு இவ்வூரைச் சேர்ந்த முத்தையா கோனார் பூசை வைத்ததாக கிராமத்தார்கள் சிலரும், நகரத்தார்களும் கூறுகிறார்கள். ஆனால், தற்போது அந்த கோனார் வகையினர் கோயிலின் பூசைகளில் கலந்து கொள்வதில்லை என்றும் அதற்கு காரணம் உண்டு. அக்காரணம் கருதி அந்தக் குடும்பம் ஊரில் இருந்து தள்ளி வைக்கப்பட்டுள்ளது என்ற செய்தி களஆய்வின்போது தெரியவருகிறது.

[7] தகவலாளி. பலவான்குடி கு. ம வள்ளியப்பன் தந்த தகவல்.

இருந்தபோதிலும், அவர்கள் பூசைக்கு வரவில்லையானாலும் அவர்களுக்கு என்று ஒரு பள்ளயம் ஒதுக்கப்படுவதாக கூறப்படுகிறது.

முன்னோடிக் கருப்பர் கோயிலில் உ ள்ள பிறதெய்வங்கள்

முன்னோடிக், கருப்பரின் உள் வளாகத்தில் வெளிப்புற வலது பக்கத்தில் காஞ்சினமரமும், அரசுமகன் என்று அழைக்கப்படுகின்ற வேலும் இருக்கிறது

கோயிலின் வெளிப்புறத்தில் அடுப்பு நிரந்தரமாக அமைக்கப்பட்டுள்ளது. கருப்பரின் இடப்பக்கத்தில் வீரமரம் ஒன்று உள்ளது. அதன் அடியில் தான் பால் கொட்டியது என்ற வரலாறு உண்டு. அதன் அருகில் நிரந்தரமாக தேங்காய் உடைக்க ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளது.

முன்னோடிக் கருப்பர் முன் மண்டபத்தில் நகரத்தார்கள் தங்கள் குழந்தைகளை தொட்டிலில் வைத்து ஆட்டுவார்கள். அதற்காக தொட்டில் ஒன்று உள்ளது.

கோவிலின் இடப்பக்கத்தில் நல்லபிள்ளை பெற்றாள் ஊரணி என்ற குளம் இருக்கிறது. இந்த குளத்தில் ஊற்று எந்நாளும்

உள்ளது. இதன் நீரை அருகாமையில் உள்ள கிராமத்தார்களும் பயன்படுத்துகிறார்கள்.

இவ்வாறு இவ்விரு கோயில்களும் மக்களின் நம்பிக்கைகளுக்கு ஏற்ற நிலையில் வரலாற்றையும் அமைப்பையும் பெற்றுள்ளன.

<u>கோயில் பராமரிப்பு</u>

அவ்வப்போது இக்கோயில்கள் பராமரிப்பு செய்யப் பெற்றுள்ளன. அவை விவரம் பின்வருமாறு.

தலைக்காவுடை ஐயனார் கோயிலுக்கும், முன்னோடிக் கருப்பருக்கும் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எணபத்தொன்பதாம் ஆண்டில் ஒருமுறை குடமுழுக்கு நடைபெற்றிருக்கிறது.

அதன் பிறகு 16.09.05ல் வெள்ளிக்கிழமை அன்று மற்றொரு குடமுழுக்கு நடைபெற்று இருக்கிறது.

மேற்கண்ட குடமுழுக்கு விழாக்களை கிராமத்தார்கள் மற்றும் நகரத்தார்கள் ஆகியோர் சேர்ந்து இருகோயிலுக்கும் நடத்தியிருக்கிறார்கள்.

முடிவுகள்

1. செங்கீரை என்ற ஊர் இருவகை நிலையில் பெயர் பெற்றிருக்கலாம். ஒன்று இவ்வூரில் வழக்கில் உள்ள நாட்டுப்பபுறக் கதை மற்றும் காவிக்குழி அடிப்படையில் பெயர் பெற்றிருக்கலாம். மற்றது இவ்வூர் செங்கீரை என்ற பிள்ளைத் தமிழ் பருவ அடிப்படையில் நாட்டுப்புறக்கதையின் பெண் வளரச்சியைக் குறிக்கும் முறையில் செங்கீரைப் பருவம் என்ற பின்புலத்தில் பெயர் பெற்றிருக்கலாம். எவ்வாறாயினும் இவ்வூருக்கும் மதுரைக்கும் தொடர்பு படுத்தப்படுகிறது என்பது உறுதி

2. மேலும் இவ்வூரில் உள்ள தலைக்காவுடைய ஐயனார் என்ற தெய்வம் தலைகாக்கும் தெய்வம், தழைகள் நிரம்பிய காட்டின் தெய்வம் என்ற நிலைகளில் இப்பெயர் பெற்றிருக்கலாம் என்று முடியலாம்.

3. முன்னோடிக் கருப்பர் தோன்றியதற்கு ஒரு இடையர் கதை சுட்டப் பெறுகிறது. இவர் கொண்டு செல்லும் பால் தவறுவதால் இத்தெய்வ இருப்பிடம் கண்டறியப்பட்டு அதன் பின் கோயில் உருவாக்கப் பட்டுள்ளது.

4. இவ்வாறு இவ்வூர் கடவுள்கள் பற்றிய செய்திகள் அறியப் படுகின்றன.

5. இக்கோயில்கள் சார்ந்து பிற சுற்றுத் தெய்வங்களும் அமைந்துள்ளன. அவையும் மக்கள் வழிபடத்தக்கன.

இயல் - 3

கோயிலில் உள்ள தெய்வங்களும் வழிபாட்டு முறையும்

சிறுதெய்வங்கள் பல தமிழகத்தில் உள்ளன. அவை பொதுவாக கருப்பர், சன்னாசி, முன்னோடிக் கருப்பர் என்ற பொது நிலையில் இருந்தாலும் ஒவ்வொரு ஊரில் உள்ள சிறுதெய்வக் கோயில்களிலும் ஒவ்வொரு வகையான வழிபாடு நடைபெறுத்தப் பெற்று வருகிறது. இதன் மூலமே அத்தெய்வங்கள் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டமைகின்றன.

செங்கீரை என்ற ஊரில் உள்ள சிறுதெய்வக் கோயில்களில் நடைபெற்று வரும் வழிபாடு குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

தலைக்காவுடைய ஐயனார் கோவிலின் முக்கிய தெய்வமாக விளங்குபவர் தலைக்காவுடைய ஐயனார் ஆவார். இவரைச் சுற்றிப் பல தெய்வங்கள் வைத்து கோயிலின் வழிபாடு நிகழ்த்தப்பெறுகிறது.

ஐயனார் கோவிலுக்குப் பின்புறம் உள்ள முன்னோடிக்கருப்பர் கோயிலும் ஒரு முக்கிய தெய்வமாக கருதப்பட்டு வழிபாடு நிகழ்த்தப் பெற்று வருகிறது. இவை முன்னரே கண்ட செய்திகள்.

மேற்கண்ட இரு தெய்வங்களின் சக்தியை அறிந்தவர்களும், நாட்டுக்கோட்டை நகரத்தார்களும் இத்தெய்வங்களை வழிபடுகிறார்கள். அத்தெய்வ வழிபாடகள் பற்றிய செய்திகளைத் தருவதாக இக்கட்டுரை அமைகிறது.

விநாயகர் - வழிபாடு

தலைக்காவுடை ஐயனாரின் கருவறைக்குச் செல்தவற்கு முன் விநாயகர், நாகர் ஆகிய தெய்வங்கள் காட்சியளிக்கின்றன.

இத்திருவுருவச் சிலைகள் கிட்டதட்ட இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது என்கின்றனர் மக்கள். இது கருங்கல்லினால் செய்யப்பட்டுள்ளது.

இவருக்கு முதலில் வழிபாடு செய்த பின்னரே மற்ற தெய்வங்களுக்கு வழிபாடு நிகழ்த்தப் படுகிறது.

இத்தெய்வ வழிபாடு வேளார் என்ற மரபினரால் செய்யப்பட்டு வருவது மரபாகும். வேளாளர் என்ற உழவுத் தொழில் செய்யும் மரபினர் இவ்வழிபாட்டு உரிமையைப்பெற்றுள்ளனர். இங்கு அந்தணர்கள் பூசை செய்ய அனுமதிக்கப் பெறுவதில்லை.

தலைக்காவுடைய ஐயனார் (மூல தெய்வம்)

தலைக்காவுடைய ஐயனார் கிழக்கு நோக்கி அமைந்திருக்கும் கோயிலின் கருவறைப்பகுதியில் உள்ளார். ஐயனாருக்குரிய படைக்கலனாகப் பொதுவாக அரிவாள் அமையும். ஆனால் இக்கோயிலில் உள்ள ஐயனாருக்கு அரிவாள் போன்ற கருவி முனை இல்லாமல் விளங்குகிறது.

தலைக்காவுடைய ஐயனார் உருவ அமைப்பு

தலைக்காவுடைய ஐயனார் கருங்கல்லினால் செய்யப்பட்ட சிலையாகும். இவர் சிறிய உருவில் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். வலது கையில் முனை இல்லாத கத்தி ஒன்றை வைத்துக்கொண்டு காட்சியளிக்கிறார்.

இவருடன் பூரணை, புட்கலை என்ற இரு தேவியரும் உடன் உள்ளனர்.

ஐயனாருக்கு ரோஜா பூ மாலையே அர்ச்சனைக்கு உகந்ததாக உள்ளது. இருப்பினும், சம்பங்கி கதம்பம் போன்றவை மாலையாக அனுபவித்து பூசைகள் செய்கின்றனர்.

ஐயனாருக்கு ஆடை பட்டினால் செய்யப்பட்ட ஆடையாக அணிவிக்கின்றனர். பச்சை, சிவப்பு, மஞ்சள் போன்ற வண்ணங்களிலும்

விருப்பப்பட்டு மக்கள் கொண்டு வரும் ஆடைகளையும் அணிவித்து வழிபாடு செய்யப்படுகிறது.

சோலைக்கருப்பர், சின்னக்கருப்பர்

தலைக்காவுடைய ஐயனார் கோயிலின் உள் சுற்றுப் புறத்தில் ஐயனாருக்கு வலதுபுறமாக (வெளியில்) வடக்கு முகமாக நோக்கி சோலைக்கருப்பரும் மேற்கு முகமாக நோக்கி சின்னக்கருப்பரும் தெய்வங்களாக உள்ளன.

இச்சிலைகள் கருங்கல்லினால் செய்யப்பட்டுள்ளது. கருப்பர்களின் வாகனம் குதிரைகள் ஆகும். அவற்றோடு இவர்கள் காட்சி தருகின்றனர். தலைக்காவுடைய ஐயனாரின் வழிபாட்டின் பின் இவர்கள் வழிபாடு நடைபெறுவது வழக்கம்.

செட்டிச்சியம்மன், கருப்பாயிஅம்மன், பேச்சிஅம்மன்

செட்டிச்சி அம்மன், கருப்பாயி அம்மன், பேச்சி அம்மன் மூன்று தெய்வங்களும் ஐயனார் கோயிலின் சுற்றிப்புறத்தில் கருங்கற்களினால் ஆன சிலைகளாக உள்ளன. இவற்றுக்கும் மற்ற தெய்வங்களுக்கு நடைபெறும் நிலையில் வழிபாடு நிகழ்த்தப் பெறுகிறது.

பெரிய கருப்பண்ணசுவாமி, அகோரவீரபத்திரர் சுவாமி

அம்மன்களுக்கு, அடுத்தார்போல் அருகாமையில் தெற்கு-வடக்காக பெரிய கருப்பர் வலது கையில் முனை இல்லாத அரிவாளுடன் இடது கையில் சுக்கு மாந்தடியும் கொண்டு மிக அழகாக காட்சி தருகிறார்.

கருங்கல்லினால் இச்சிலை அமைக்கப் பெற்றுள்ளது. மூன்று அடி உயரத்தில் மிக கம்பீரமாக தனக்கே உரிய முறுக்கு மீசையுடன் காட்சியளிக்கிறார்.

அதற்கு அருகாமையில் அகோவீரபத்திரன் சுவாமி கருங்கல்லினால் ஆன சிலையாக காட்சியளித்துக் கொண்டிருக்கிறார்.

இத்தெய்வங்கள் இரண்டிற்கும் அடுத்து பூசை நிகழ்த்தப் படுகிறது.

சித்தி விநாயகர்

ஐயனாரின் கோயிலின் உட்பகுதியில் பின்புறமாக மேற்கு கிழக்காக சித்திவிநாயகர் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். இது பெருந்தெய்வக் கோயில்களில் காணப்படும் முறைமை ஆகும். இக்கோயிலிலும் இம்முறை பின்பற்றப் பெற்றுள்ளது.

இவருக்கும் தக்க நிலையில் வழிபாடு செய்யப் படுகிறது.

அரசு மகன், சன்னாசி, கன்னிமார் பெண்கள் தண்டாயுதபாணி

ஐயனார் கோயிலின் உட்பகுதியில் பின்புறத்தில் மேற்கு-கிழக்காக அரசுமகன் என்ற வேல், சன்னாசி ஆகிய தெய்வங்கள் உள்ளன. இவற்றில் வேலுக்குத் தனித்த வழிபாடு நிகழ்த்தப் படுகிறது. அதற்கு தனி நிவேதனப் பொருளும் சர்க்கரையும் கொண்டு வழிபாடு நடத்தப் பெறுகிறது.

மற்றும் கன்னிமார்பெண்கள் என்று அழைக்கக்கூடிய ஏழு பெண்கள் கருங்கல்லினால் ஆன சிலைகளாக உள்ளனர். இவர்களுக்கும் பூசை நடத்தப் படுகிறது.

அதற்கு அடுத்தாற்போல தண்டாயுதபாணி நின்ற கோலத்தில் காட்சியளித்துக் கொண்டிருக்கிறார். இம் முறைமையும் பெருந்தெய்வக் கோயிலின் அமைந்துள்ள முறையாகும். இங்கும் இம்முறை பின்பற்றப் பெற்றுள்ளது. இத்தெய்வத்திற்கும் வழிபாடு இயற்றப் பெறுகிறது.

மதகடிச்சாத்தர்

ஐயனாரின் உட்புறப்பகுதியில் இடப்புறத்தில் வடக்கு-தெற்காக மதகடிச்சாத்தர் அமைந்து காட்சியளிக்கிறார். இவருக்கும் பூசை நடைபெறுகிறது.

அடைக்கலம் காத்தார்

வடக்கு-தெற்காக அடைக்கலம்காத்தார் தெய்வம் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. இத்தெய்வத்தின் பூர்வீக சிலை ஒன்று செங்கீரை நாட்டுப்பகுதியில் ஐயனார் கோவிலின் முன்புறமாக சுமார் ஒரு கிலோமீட்டர் தொலைவில் காட்டுப்பகுதியில் உள்ளது. இங்குள்ள அடைக்கலங்காத்தாருக்கும் பூசை செய்யப்பட்டு வருகிறது. தூரத்தில் உள்ள தெய்வத்தை வணங்கமுடியாத ஏக்கத்தை இத்தெய்வம் தீர்க்கிறது.

ஐயனார் கோவிலின் முன் மண்டபத்தில் வலப்புறமாக நுழைவாயிலுக்கு பக்கத்தில் வெட்டப்பட்ட கிணறு ஒன்று உள்ளது. அக்கிணற்றில் இருந்துதான் கோயிலுக்கு தேவைப்படுகின்ற தண்ணீர் இறைத்து பயன்படுத்தப்படுகிறது.

இவ்வாறு தலைக்காவுடைய ஐயனார் கோயில் தெய்வங்களுக்கு வழிபாடு நிகழ்த்தப் படுகிறது.

வழிபாடு செய்வோர்

இந்தக்கோயிலை பராமரிப்பவர்கள் வேளாளர் என்ற இனத்தைச் சார்ந்த குறிப்பிட்டக் குடும்பத்தினர் ஆவர். இவர்கள் பரம்பரைதான் பன்னெடுங்காலமாக கோயிலை பராமரிக்கிறார்கள். அவர்கள் முறையே பெரிய கருப்பர் மகன் பெரி. செல்லையா, குறுந்தவேளார்,

குறுந்தவேளார் மகன் பாண்டி வேளார், ஆர். முத்துப்பழனி, மு. சாத்தவேளார், தாடி வேளார் மற்றும் மு. ரெங்கசாமி வேளார், ஏ.ஆர். வடிவேலன், பழனிவேலு ஆகியோர் முறையாக பூசை வைத்து கோயிலை இன்னும் பராமரித்து வருகிறார்கள்.

தலைக்காவுடைய ஐய்னார்க்கு மக்கள் செய்யும் வழிபாடும், நம்பிக்கைகளும்

தலைக்காவுடைய அய்யனார் ஊர்க்காவல் தெய்வமாக விளங்குகிறார் அதனால் மக்கள் தங்களையம், தங்கள் குடும்பத்தையும் அவர் காப்பார் என்று அவ்வூர் மக்கள் நம்பிக்கையுடன் வாழ்கின்றனர்.

அதைப்போலவே செட்டிநாட்டு பெருமக்களும், குறிப்பாக பலவான்குடி, அரிமழம், நேமத்தான்பட்டி, கொத்தமங்கலம், சிராவயல், கோ.அளகாபுரி நாச்சியார்புரம், தேவக்கோட்டை ஆகிய ஊர்களில் உள்ள நகரத்தார்களும் இவ்வையனாரையும் முன்னோடிக் கருப்பர், பெரிய கருப்பண்ணசுவாமி ஆகியோர்களையும் தங்களின் காவல் தெய்வங்களாக போற்றி வழிபடுகிறார்கள்.

மக்கள் தங்கள் குடும்பம் தழைக்க வேண்டும் என்று ஐயனாரிடம் வேண்டிக்கொண்டு, நேர்த்திக் கடனாக பொங்கல் இட்டு, கிடாய் வெட்டி, கோழி அறுத்து படையல் இட்டு வழிபடுவார்கள்.

புதிதாக வாகனம் வாங்கினால் முதலில் தலைக்காவுடை ஐயனார் மற்றும் முன்னோடிக் கருப்பர் கோயில்கள் ஆகியவற்றின் வாசல்களில் வைத்து ஐயனாருக்கு அர்ச்சனை செய்து, சூடம் காண்பித்து வாசலில் சிதறுகாய் உடைத்த பிறகே எடுத்துச் செல்வர். இதன் மூலம் அய்யனார், கருப்பர் காவல் தெய்வமாக இருந்து காப்பார் என்று மக்கள் நம்புகின்றனர்.

குழந்தைப்பேறு

காளியம்மன் இருக்கும் இடத்தில் ஒரு மரம் ஒன்று இருக்கிறது. இம்மரத்தில் குழந்தைப்பேறு இல்லாமல் இருப்பவர்கள் தமக்கு குழந்தை பாக்கியம் தரும்படி வேண்டிக்கொண்டும், காளியிடமும் வேண்டிக் கொண்டு துணியால் முடிச்சு போட்டுவிட்டு சென்றுவிடுகிறார்கள். குழந்தை பாக்கியம் கிடைத்தது அதை வந்து அவிழ்த்து விடுகிறார்கள்.

முன்னோடிக் கருப்பர்

செங்கீரை கிராமத்தில் இருந்து வரும்போது முதலில் தென்படுவது இக்கோயில் ஆகும். இதுவே தற்போது மக்களால் வழிபடப்படும் முக்கிய தெய்வமாக உள்ளது.

இதன் வெள்ளிக் கவச அலங்காரப் படங்கள் தற்பொழுது பரவலாக வர்த்த நிறுவனங்களில் வைத்து வணங்கப்படும் நிலையில் மக்களால் ஏற்றுக் கொள்ளப் பெற்று வருகிறது.

முன்னோடிக் கருப்பரின் தோற்றம்

மூலவர் 'முழங்கு அழலாய் நிமிர்த்த' முன்னோடிக் கருப்பா என்ற அடையுடன் அழைக்கப் பெறுகிறார். நெருப்பைப் போன்று உண்மையையும் தூய்மையையும் உடையவர் என்பது இதன்வழி தெரியவருகிறது.

இவரின் உருவம் , பெரிய திருவுருவம் ஆகும். அழகிய கற்சிலை வடிவமாக இவர் வடிவமைக்கப் பெற்றுள்ளார். இவர் அருகில் மூவிலைச்சூலம் உள்ளது.

இவருக்கு அன்றாடம் அபிடேகம் கிடையாது. உயிர்பலி கொடுத்து உபயம் செய்தால் மட்டுமே அபிடேகம் நடைபெறும். இவ்வழிபாடு எப்பொழுதாவது மட்டுமே நடைபெறும்.

மற்ற நாட்களில் நிர்மால்யத்தைக் கூட அகற்றுவதில்லை. சாம்பிராணி போட்டு தீபம் காட்டுவதோடு சரி. எனினும் அடிக்கடி இவருக்கு பால், தயிர் அபிஷேகங்கள் நடைபெறுவது உண்டு. இவ்வழிபாட்டின்போது உயிர்ப்பலி தருவது கிடையாது.

முன்னோடிக் கருப்பர் சந்நிதிக்கு வலப்புறம் காஞ்சினமரத்தின் பட்டுப்போன ஒரு கிளை உள்ளது. அதன் அருகில் வேல் ஒன்று காணப்பெறுகிறது. கருப்பருக்குச் சிறப்பு பூசை நடைபெறும்போது

இவ்வேலுக்கும் வெண்பொங்கல் வைத்து, அதன் மேல் சர்க்கரை தூவி வழிபடும் முறை உண்டு.

முன்னோடிக் கருப்பர் குறித்த மக்கள் நம்பிக்கைகள்

இங்குள்ள காஞ்சின மரமும், கருப்பர் சந்நிதியின் இடப்புறம் தெற்கில் உள்ள வீரமரமும் மக்கள் நம்பிக்கைக்கு உரியன.

காஞ்சின மரத்தில் பல்லி சத்தமிட்டால் நல்லது என்றும், வீரமரத்தில் கௌளி சொன்னால் தீயது என்றும் மக்கள் நம்புகின்றனர்.

இவ்வாறு இரு கோயில்களின் வழிபாட்டு முறையும் மக்கள் நம்பிக்கைகளும் அமைகின்றன. இவை கோயில் சார்ந்த வழிபாட்டு முறைகள் ஆகும்.

கோயில் சாராமல் ஊர் வழிபாட்டு முறை, நகரத்தார் படைப்பு வழிபாட்டு முறை என்ற இரண்டு வழிபாட்டு முறைகள் இத்தெய்வங்கள் குறித்து அமைகின்றன. அவை பற்றிய செய்திகளை அறிந்து: கொள்வதன் மூலம் இக்கோயில்கள் பற்றிய முழுமையான தகவல்களை அறிந்து கொள்ள இயலும்.

ஊர் மக்கள் வழிபாட்டு முறை

இப்படிப்பட்ட சிறப்பு மிகுந்த கோயில்களில் ஊர்மக்கள் பொது வழிபாட்டினைச் செய்து வருகின்றனர்.

ஒவ்வோர் ஆண்டும் ஊர்மக்கள் ஐயனாரும் புரவியெடுத்தல் என்ற விழாவை வைகாசி கடைசி முதல் வாரத்தில் இருந்து ஆனி முதல் வாரத்திற்குள் நடத்துகிறார்கள்.

புரவி எடுத்தல்

செங்கீரை கிராமம் சுமார் நானூறு வீடுகளையும், சுமார் ஓராயிரத்து: முன்னூறு என்ற அளவில் மக்கள் தொகையையும் உடைய கிராமம் ஆகும்.

இங்கு மூன்று இனத்தை சேர்ந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர். வல்லம்பர், அம்பலகாரர், வேளார்கள் ஆகிய மூவரும் குறிக்ககத் தக்கவர்கள். இவர்களோடு பிற இன மக்களும் கலந்து வாழக்கூடிய கிராமம் செங்கீரை கிராமம் ஆகும்.

இக்கோயிலின் திருவிழா என்றால் அது தான் புரவி எடுத்தல என்பதாகும். அதாவது புரவி எடுத்தல் என்பது மண் குதிரைகளைத் தெய்வத்தின் வாகனமாக ஆக்கித் திருவிழா எடுத்தல் ஆகும்.

வேளாளர்கள் தங்கள் தொழிலுக்கு உதவியான பொருட்களை மண்ணால் செய்து கொள்வது வுழக்கம். அவ்வகையில் தம்மைக் காக்கும் தெய்வத்திற்கு மண்ணால் ஆன குதிரைகளைக் காணிக்கையாக்குவது என்பது புரவி எடுத்தல் திருவிழாவாக கொண்டாடப் படுகிறது,

அதன்படி வைகாசி மாதம் இறுதியில் இருந்து ஆனி முதல் வாரத்திற்குள் நல்ல நாள் பார்த்து ஊர்மக்கள் அனைவரும் இவ்விழாவைக் கொண்டாட முடிவு எடுக்கின்றனர்.

பழங்கால மரபுப்படி அரண்மனைக் குதிரைகள் ஐந்து செய்யப்படுகின்றன. அவ்வைந்தில் இருகுதிரைகள் ஐயனாருக்கும், இரு குதிரைகள் முன்னோடிக் கருப்பருக்கும் உரித்தாக்கப் படுகின்றன.

மீதம் உள்ள ஒருகுதிரை காட்டுப்பகுதியில் உள்ள அடைக்கலம் காத்த ஐயனாருக்கு என்று கொண்டு செல்லப்படுகிறது.

<u>புரவி தயாரிப்பு</u>

அந்த ஐந்து குதிரைகளும் வேளாளர்கள் வீட்டிலேயே தயாரிக்கப் பெறுகின்றன. அவை நன்றாக வர்ணம் பூசி அழகுடன் காட்சி அளிக்கும்.

மேலும் அவ்வூர் மக்கள் தங்களின் வேண்டுதல்படி குதிரைகளை செய்யச் சொல்லுதலும்' உண்டு. இவை வேண்டுதல் புரவிகள் எனப்படுகின்றன.

இவற்றையும் வேளாளர்களே செய்து தருகின்றனர். இந்தக் குதிரைகள், மற்றும் ஊர் குதிரைகள் ஊர்வலமாக எடுத்து வந்து குதிரைப் பொட்டல் என்ற இடத்தில் வைக்கப் பெறுகிறது.

இவை முன்சொன்ன முறைப்படி ஆண்டவனுக்கு காணிக்கையாகச் செலுத்தப் படுகின்றன. செலுத்திய பிறகு கோயிலின் அருகில் உள்ள குதிரைப் பொட்டலில் ஊர்க்குதிரையை வைத்து, அன்று இரவு முழுவதும் நாடகம் நடத்தி மக்கள் இறைவனை வேண்டி நலம் பெறுவார்கள். வேண்டுதல் குதிரைகளுக்கு மக்களிடம் அவர்கள் விருப்பம் போல் குதிரைக்கு தொகை பெற்றுக்கொள்வார்கள் என்று தகவலாளிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.[8]

இவ்வாறு குதிரை ,எடுப்புத் தி:ருவிழா நடைபெறுத்தப் படுகிறது. இது ஊர்த்திருவிழாவாக மக்களிடம் ஊர்ப்பணம் பெற்று நடைபெறுத்தப் படுகிறது.

---

[8]தகவலாளி ரெங்கசாமி வேளார் மற்றும் வடிவேலன் தந்த தகவல்கள்

தனிப்பட்ட பூசை

மக்கள் தனிப்பட்ட பூசையை நடத்திக் கொள்ளவும் உரிமை உடையவர்கள் ஆவர். தலைக்காவுடைய ஐயனாருக்குத் தனிப்பட்ட முறையில் பூசை கொடுப்பவர்கள் பொங்கல் வைத்து ஐயனார் கோவிலின் உட்புறமுள்ள சின்ன கருப்பர், பெரிய கருப்பர், அகோரவீரபத்திரர், பேச்சியம்மன் ஆகிய தெய்வங்களுக்கு கீழ்க்கண்டவாறு படையில் இட்டு வழிபாடுவார்கள்.

பெரிய கருப்பர்	-	கிடாய் 1 (ஆடு)
அகோரவீரபத்திரர்	-	கூவாத சேவல்
பேச்சியம்மன்	-	கூவிய சேவல்

ஆகிய நிலைகளில் உயிர்ப்பலி இட்டு படையல் செய்து வழிபாடு நடத்தப் பெற்று வருகிறது.

அப்படி படையல் போடுகின்ற போது எட்டு பங்கு பங்காளிகளுக்குப் பிரித்து கொடுப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளார்கள் அக்கோயிலை பராமரிக்கக்கூடிய வேளாள பெருமக்கள்.

இதைப்போலவே ஊர்மக்களாகிய செங்கீரை மற்றும் சுற்றுவட்டார மக்கள் முன்னோடிக் கருப்பர் கோயிலுக்கும் பொங்கல் வைத்து, அபிடேகங்கள் செய்து பூசைபோட்டு, வழிபடுவது வழக்கமாக உள்ளது.

மேற்கண்ட செய்திகள் யாவும் ஊர்மக்கள் வழிபடக்கூடிய முறையாகும்.

நகரத்தார் எனப்படும் மரபினர் வழிபடும் முறை இதனின்று வேறுபடுகின்றது. அது பின்வருமாறு.

நகரத்தார் வழிபாட்டு முறை

செங்கீரையில் நகரத்தார் மரபினர் எவரும் இல்லை. ஆனால் செங்கீரை தெய்வத்தை அதன் சக்தி கருதி வழிபடக் கூடிய நகரத்தார் மரபினர் உள்ளனர். அவர்கள் ஏழு ஊர்களில் உள்ளனர். அவர்கள் தங்களுக்கு என தனித்த வழிபாட்டு நடைமுறைகளைக் கொண்டுள்ளனர்.

இவர்களின் வழிபாடு தலைக்காவுடைய ஐயனாரின் கோயிலில் உள்ள பெரிய கருப்பர் என்ற கருப்பரை மையமாக வைத்தது ஆகும்.

வயிரவன் கோவில் பங்காளிகள் குறிப்பாக பலவான்குடி, நேமத்தான்பட்டி, நாச்சியார்புரம், கொத்தமங்கலம், சிராவயல்

பங்காளிகள் ஆகியோர் தங்களின் குலதெய்வமான பெரியகருப்பண்ண சுவாமிக்கு பலவான்குடி உள்ள அவர்களது படைப்பு வீட்டில் ஒரு வழிபாட்டு முறையைக் கையாண்டு வருகின்றனர்.

நகரத்தார்களும் படைப்பு என்ற நடைமுறையும்

நகரத்தார்கள் கோயில்களுக்கு வந்து வணங்குவது ஒரு முறை. அக்கோயில்களில் தமக்கு முழு உரிமை இல்லாத நிலைப்பட்டனவாக இருக்கும் சூழலில் அக்கோயில் தெய்வங்களை நினைந்து வழிபடும் படைப்பு வீடுகளைத் தம் பகுதியில் ஏற்படுத்திக் கொள்வர். மூல தெய்வம் ஒரு ஊரில் இருக்க இப்படைப்பு வீடு வழிபடும் நகரத்தார்கள் அதிகம் உள்ள இடத்தில் நிறுவப்படும்.

மூல தெய்வத்தின் சார்போடு இங்கு வழிபாடு நிகழ்த்தப்படும். ஆண்டுக்கு ஒருமுறை, அல்லது இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை என்ற நிலையில் இவ்வழிபாட்டு முறை அமைக்கப் பெற்று வருகிறது. இதற்கான செலவினங்களைச் சரிசெய்து கொள்ள வரிகள், மற்றும் ஏலங்கள் நடத்தப் பெறுகின்றன.

செங்கீரை பெரிய கருப்பர் சுவாமியின் படைப்பு வீடு பலவான்குடியில் உள்ளது. அரிமழத்திலும் உள்ளது. இவை இரண்டும் தனக்கென தனித்தன்மையோடு இயங்கி வருகின்றன.

பலவான்குடியில் இக்கருப்பருக்கு ஐம்பொன்னால் ஆகிய சிலை வைத்து வழிபடப்படுவது சிறப்பு. இச்சிறப்பு வேறு எங்கும் இல்லாதது. எல்லா படைப்பு வீடுகளிலும் தெய்வத்தின் அடையாளமாக பேழை எனப்படும் துணிப்பொதி இருக்கும். ஆனால் இங்குத் தனித் தெய்வமாக ஐம்பொன்சிலையாகக் கருப்பர் இருப்பது சிறப்பாகும். மற்ற துணை தெய்வங்களுக்கு பேழையே அமைக்கப் பெற்றுள்ளது.

<u>பலவான்குடி படைப்பு வீடு</u>

பலவான்குடியில் உள்ள படைப்பு வீடு பெரியதும் கலை நயம் மிக்கதும் ஆகும். இது நகரத்தார் வீட்டு அமைப்பில் கட்டப் பெற்றுள்ளது. எனினும் கோயில் அமைப்பைப் போல கருப்பர் சன்னதியை மையமாக வைத்து இது அமைக்கப் பெற்றுள்ளது.

மேலும் இது சமையல் செய்யப்படும் இடம், சைவ, அசைவச் சாப்பாடு போடப்படும் இடம், பட்டாலை, வளவு, நுழைவாயில் ஆகியன கொண்டு விளங்குகிறது.

இவ்வீடு வருவதற்கு முன் மண்குடிசையில் இப்படைப்பு நடைபெற்று வந்துள்ளது. அப்பொழுது உருவச் சிலை இல்லை. பூலான் கம்பு, ஆவாரம்பூ, வெள்ளிக் கண்மலர் ஆகியன கொண்டு கருப்பர் உருவம் கொண்டாடப் பட்டுள்ளது.

இப்படைப்பு வீடு 1931 ல் கட்டப் பெற்று 1933ல் நிறைவு செய்யப் பெற்றுள்ளது. இந்நிறைவின் பொழுது கருப்பரின் ஐம்பொன் சிலை நிறுவப் பெற்றுள்ளது.[9]

படைப்பு முறை

பலவான்குடி படைப்பு வீட்டு படைப்பு முறை செங்கீரை மூலக் கோயிலில் தொடங்கப்படுகிறது. ஆடி மாதம் பௌர்ணமிக்கு அடுத்து வருகிற வெள்ளிக்கிழமை அன்று இவ்வழிபாடு செங்கீரையில் தொடங்கப்படுகிறது. அதன்பின் அதனைத் தொடர்ந்து வரும் திங்கள் கிழமை, செவ்வாய்க் கிழமை ஆகிய கிழமைகளில் படைப்பு வீட்டில் படைப்பு நிகழ்த்தப்படுகிறது.

திங்கள் கிழமை பலவான்குடியில் படைப்புக்கான ஏற்பாடு செய்யப்படும். பனியாரத்திற்கான முன்னேற்பாடுகள் நடைபெறும். பனியாரம் செட்டிநாட்டார்க்கே உரிய உணவுப்பொருள். இது இங்கு கருப்பருக்குப் படையலாக கொள்ளப்ப்டுகிறது. மதியம் பனியாரம் ஊற்றப்படும்.

அந்தி சாயும் நேரத்தில் கருப்பரின் அபிடேகம் நடைபெறும். மேலும் தெய்வங்களுக்கான பேழைகள் படைப்பிற்காகத் தக்கவகையில்

---

[9] வே.ராமசாமி, பெரிய கருப்பண்ணசுவாமி, படைப்பு மலர், பக் 4-5 ஆகியவற்றில் சொல்லப் பெற்ற செய்திகளின் சுருக்கம்.

தயார்படுத்தப்படும். பின் கருப்ப:ருக்கு பல அபிடேகங்கள் நடத்தப் பெற்று அன்று இரவு அலங்காரம் செய்யப்படும்.

செவ்வாய்க் கிழமை கருப்பருக்கு உரித்தான படையல் ஆட்டுக்கறி மற்றும் பல உணவுப்பொருள்களுடன் நடத்தப்படும். இதுபொழுது கருப்பர் தெய்வம் சில நகர்ததார்களிடம் அருள்வந்து ஆடும். இந்நடைமுறை பக்தி மயமானது.

பின் பனியாரம் பிரித்துத் தரப்பெற்று, ஏலம் நடத்தப்படும். இவ்வகையில் இப்படையல் நடைபெற்று வருகிறது. இப்படையில் செவ்வாய்க் கிழமை மாலையில் நிறைவுறும்.

<u>அரிமழம், நேமத்தான்பட்டி நகரத்தார் வழிபாட்டு முறை</u>

அரிமழம், நேமத்தான்பட்டி மாத்தூர் அரும்பாக்கூர் பிரிவைச் சேர்ந்த நகரத்தார்களும் இத்தெய்வத்தை வணங்கி வருகிறார்கள். இவர்கள் ஆடிமாதம் மூன்றாம் வெள்ளிக்கிழமை அன்று இவ்வழிபாட்டைத் தொடங்குகின்றனர்.

பலவான்குடி படைப்பு பெரும்பாலும் முதல் அல்லது இரண்டாம் வெள்ளிக்கிழமைகளில் நடைபெற்றுவிடும் என்பதால் இது அரிமழம் நகரத்தார் படைப்பிற்கான நாளாயிற்று.

அரிமழம், நேமத்தான்பட்டி, (மாத்தூர் அரும்பாக்கூர் பிரிவு) சேர்ந்த நகரத்தார்கள் மூன்று கரைகளாக இருந்து பல ஆண்டு காலமாக இக்கருப்பரை வழிபடுகிறார்கள். அதில் அரிமழம் கரை -2, நேமத்தான்பட்டி கரை-1.

அரிமழம் கரை

சி.ப.லெ.செ. லெட்சுமணன் செட்டியார்

சி.ப.லெ.மு.அருணாச்சலம் செட்டியார்

சி.மு.நா. முத்துவீரப்ப செட்டியார்

கரு.மு.கருப்பஞ்செட்டியார்

கரு.மு.க.சடையப்ப செட்டியார்

கரு.மு.வீர.வீரப்ப செட்டியாா

வே.பழ.கரு.முரு மற்றும்

வே.மு.அரு.கா.ராக.சே.சித.சே.மு.சே. முத்தையா செட்டியார்.

ஆகிய கரையினர் அல்லது பரம்பரையினர் இவ்வழிபாட்டில் கலந்து கொள்கின்றனர்.

நேமத்தான்பட்டி கரை

அ.சிவ.அழகப்ப செட்டியார்

அ.சிவ.நாராயணன்செட்டியார்

அ.சிவ.சிதம்பரம்

இக்கரைகாரர்கள் கருப்பர் வழிபாட்டிற்கு உரியவர் ஆவர்.

மேலே கண்ட கரைகாரர்களின் பங்காளிகள் மொத்தம் அரிமழம் - 28½ புள்ளியும் நேமத்தான்பட்டி 30½ புள்ளியும் ஆக மொத்தம் 59 புள்ளிகள் தற்பொழுது உள்ளனர்.(புள்ளிகள் என்பது நகரத்தார் கணக்கீட்டு முறையாகும். அதாவது திருமணம் செய்து கொண்ட ஓர் ஆண் ஓர் புள்ளி என்ற கணக்கில் அடங்குவார்.)

இவர்கள் நெடுங்காலமாக புள்ளி ஒன்றுக்கு ரூபாய் பத்து வீதம், போட்டு மீதப் பற்றாக்குறைக்கு ஒரு சில பங்காளிகள் பணத்தை போட்டு நடத்தி வந்திருக்கிறார்கள். மேலும், படைப்பு முடிந்து மீதமுள்ள பொருட்களை தங்களுக்குள் ஏலம் விட்டு படைப்பு வீட்டுக்குரிய செலவுக்காக பணத்தை பெருக்கி வருகிறார்கள்.

இவர்கள் ஆண்டுதோறும் ஆடிமாதம், இரண்டாவது வெள்ளிக்கிழமை ஐயனாருக்கும், கருப்பருக்கும் பொங்கல் வைத்து, பூசை போட்டு இரவு நடுநிசிக்கு மேல் கிட்டதட்ட விடியற்காலையில் சுமார் 4.00 இருந்து 5.00 மணிக்குள் உணவு உண்பது வழக்கமாக இருந்து வருகிறது.

பூசாரி பள்ளயம் போடுகிறபோது, மொத்தம் 13 பள்ளயம் போடுகிறார். அதில் வல்லம்பர் 4½ பங்கு ஆகும. இதனைச் சுமார்

20 குடும்பங்கள் அதை பிரித்துக்கொள்கிறார்கள். பூசாரிக்கு 4½ பங்கு பொதுவான பங்கு 4. ஆகமொத்தம் 13 பன்னயம்.

இந்தப் பொதுவான பங்கில் ஒரு பங்கு கோனார் குடும்பத்திற்கு, ஒரு பங்கு பூசை போடுகிறவருக்கு, இரண்டு பங்கு வல்லம்பர் வீட்டிற்கு பாச்சோறு காப்பரிசி முதலியவற்றுடன் சென்று சேர்கிறது.

இவ்வழிபாட்டு முறை கோயிலில் நடைபெறும் முறையாகும். இந்நடைமுறை தவிர இவர்கள் படைப்பு வீட்டிலும் சில வழிபாட்டு முறையைப் பின்பற்றி வருகின்றனர்.

அரிமழம், நேமத்தான்பட்டி, (மாத்தூர் அரும்பாக்கூர் பிரிவை)யை சேர்ந்தவர்கள் மிகச்சிறப்பாக ஐயனாருக்கும், முன்னோடிக்கருப்பர், பெரியகருப்பர், சின்ன கருப்பர், மற்றும் பிற தெய்வங்களுக்கும் படையில் செய்து வழிபடுகிறார்கள். அப்போது பின்வரும் பொருள்கள் கொண்டுசெல்லவேண்டும் என்று பெரியவர்கள் குறித்து வைத்துள்ளனர். அம்முறை பின்வருமாறு.

<u>சிவன்கோயிலுக்கு தரப்பெறும் பொருள்கள்</u>

புளியோதரைக்கு முந்திரிப்படி பச்சரிசி – 1படி, மாலை-1, தேங்காய்-2, வாழைப்பழம்-4, புஷ்பம், சூடம், சாம்பிராணி, ஊதுபத்தி, வெற்றிலை பாக்கு, நல்ல எண்ணெய், கடலைஎண்ணெய்,

கடலைப்பருப்பு, உப்பு, புளி, கடுகு, மிளகாய் ஆகியன தரப்பெற வேண்டும்.

செல்லாயி அம்மன் கோயிலுக்கான பொருள்கள்

புளியோதரைக்கு - முந்திரிப்படி பச்சரிசி -1படி, மாலை-1, தேங்காய்-1, வாழைப்பழம்-2, புஸ்பம், சூடம், சாம்பிராணி, ஊதுபத்தி, வெற்றிலைபாக்கு, நல்ல எண்ணெய், கடலைஎண்ணெய், கடலைப்பருப்பு, உப்பு, புளி, கடுகு, மிளகாய் ஆகியன தரப்பெற வேண்டும்.

முன்னோடிக்கருப்பருக்கும் அரசுமுகனுக்கும்

காப்பரிசி முந்திரிப்படி பச்சரிசி – 1படி, சர்க்கரை-1½கி, மஞ்சள், திரவியப்பொடி, தேங்காய்-4, பழம்-8, சூடம், சாம்பிராணி, வெற்றிலைபாக்கு, ஊதுபத்தி, 3-முழம் மாலை-1, 1-முழம் மாலை-1, புஷ்பம், திரிநூல், நல்ல எண்ணெய், கடலைஎண்ணெய பஞ்சாமிர்தத்துக்கு வாழைப்பழம், கிஸ்மிஸ்பழம், பேரீச்சம்பழம்.

ஐயனார் கோயிலுக்குத் தரவேண்டிய பொருட்கள்

பச்சரிசி முந்திரிப்படி – 4, தேங்காய் - 7 (விநாயகர், சுப்பிரமணியம், ஐயனார், சின்ன கருப்பர், பெரிய கருப்பர், வீரபத்திரன், பேச்சியம்மன் ஆகியோருக்கு) மேலும் பின்வரும் அபிடேகப்பொருட்கள் தரப்பெற வேண்டும். மஞ்சள், திரவியப்பொடி, 3முழம் மாலை-1,2முழம் மாலை-2, 1முழம் மாலை-1, பூக்கள், வாழைப்பழம் -

14சூடம்,சாம்பிராணி, வெற்றிலைபாக்கு, ஊதுபத்தி, ந.எண்ணெய், க.எண்ணெய், திரிநூல், பஞ்சாமிர்தத்துக்கு, வாழைப்பழம், சர்க்கரை, உலர் திராட்சைப் பழம், பேரீச்சம்பழம் ஆகியன தரப்பெற வேண்டும். இவை தவிர

பெரிய கருப்பர்	-	கிடாய்1
பேச்சியம்மன்	-	முட்டை 1, கச்சப்பொடி கருவாடு, முருங்கைக்காய், பெருங்காயம், கருப்பட்டி
அகோரவீரபத்திரருக்கு	'-	சேவல்1, பெட்டைக்கோழி 1
சின்னக்கருப்பருக்கு	-	கூவாத சேவல்1, விறகு, வெங்காயம், மிளகாய்த்தூள், மல்லித்தூள், பூண்டு.

ஆகியன கணக்கில் கொள்ளத்தக்கன.

<u>ஊரணி விநாயகருக்குத் தர வேண்டிய பொருட்கள்</u>

தேங்காய்-1, வாழைப்பழம்-2, சூடம், சாம்பிராணி, ஊதுபத்தி, வெற்றிலைபாக்கு, பூ, நல்லெண்ணெய் ஆகியன தரப் பெற வேண்டும்.

ஐயனார், முன்னோடிக்கருப்பர், கோட்டை அறைக்கு சிதறு தேங்காய்-3. ஆகியனவும் மறவாமல் எடுத்துக் கொள்ளவேண்டிய பொருட்கள் ஆகும்.

இவற்றை நினைவுக்குறிப்புகளாகக் கணக்குப் பார்த்தவர் குறித்து வைத்துள்ளார். இதன்மூலம் தேவையான பொருட்கள் எடுத்துச்செல்லப் பெற வசதி ஏற்படும். இது தவிர நடந்து கொள்ளவேண்டிய முறைகளும் குறித்துக்காட்டப் பெற்றுள்ளன.

<u>செங்கீரையில் செய்ய வேண்டிய விபரம்</u>

- பூசை போடுவதற்கு கோயில் வீட்டில் இருந்து சாமான்கள் வண்டியில் ஏற்றிப் போக வேண்டும்.
- முன்னோடிக்கருப்பருக்கும், ஐயனாருக்கும் கோயில் பூசை வந்திருக்கும் எல்லோரும் குளித்தபிறகு முதலில் அபிடேகச்சாமான்கள் எடுத்து கொடுக்க வேண்டும்.
- முன்னோடிக் கருப்பர் முன்னால் பொங்கல் தவலை 3 வைத்து அரிசி ஒவ்வொருவருக்கும் முந்திரிப்படியால் 6¼ படி போட வேண்டும்.
- தென்புறம் அரிமழம் சி.ப.லெ.செ.வெ., சி.ப.வெ.மு.அரு., சி.மு.நா.சீ.கரு.ச.கரு.மு.வீர கரைப் பானையை அடுத்து, வெ.முரு.கா.வெ.பழ.,கரு.முரு,செ.சித,செ.மு.செ.கரைப்பானை யை வைக்க வேண்டும்.
- பால் பொங்கியதும் அபிடேக்ம் செய்ய வேண்டும்.
- அபிஷேகம் செய்து முடித்ததும் அரசு மகனுக்கு காப்பரிசி வைத்து படைக்க வேண்டும். பிறகு

முன்னோடிக்கருப்பருக்கு பூமாலை மட்டும் போட்டு குட்டி நிமித்தம் (கிடாய்) பார்க்க வேண்டும்.

- வெள்ளிஅங்கி சாத்திய பிறகு அலங்காரம் செய்ய வேண்டும்.
- முதலில் ஐயனார் கோவிலில் சுவாமி தரிசனம் செய்ய வேண்டும்.
- பிறகு, முன்னோடிக் கருப்பர் கோயிலில் சுவாமி தரிசனம் செய்ய வேண்டும்.
- மின்சார விளக்குகள் எரிவது போக உபரியாக கொஞ்சம் போட வேண்டும்.
- கியாஸ்லைட்டு நான்கும் கொண்டு போக வேண்டும்.
- பூசைக்கு வந்திருக்கிற எல்லோருக்கும் பொங்கல் வைப்பதற்கு முன் சாப்பிடுவதற்கு பொங்கப்போட்டு சாம்பார் வைக்க வேண்டும்.
- காபி, அல்லது தேநீர் கொடுக்க வேண்டும்.

இவையும் வழிபாட்டில் குறை வந்துவிடக் கூடாது என்பதற்கு எழுதி வைக்கப்பெற்றக் குறிப்புகளாக உள்ளன. இவ்வகையில் அரிமழத்தார்கள் வழிபாடு செய்கின்றனர்.

படையல் கொடுக்கின்ற முறை

முன்னோடிக் கருப்பருக்கு மூன்று கரைக்கு மூன்று பகுதி படையல் தொகுதிப் பொருள்கள், ஐயனார் கோவிலில் உள்ள பெரியகருப்பண்ண சுவாமிக்கு ஒரு கரைக்கு ஏற்ற நிலையில் ஒரு படையல் தொகுதி, அகோர வீரபத்திரருக்கு – ஒரு சேவல், பேச்சியம்மனுக்கு – ஒரு கோழி, ஒரு முட்டை, கடந்த நான்கு வருடங்களாக சின்னக்கருப்பருக்கு ஒரு கூவாத சேவல் என்ற நிலையில் படையல் பொருட்கள் இவ்வூர் நகரத்தார்களால் படைக்கப் பெறுகின்றன.

இவைகளை கொண்டு வந்து ஐயனார் கோயிலுக்குரியவற்றை அந்த பூசை செய்யக்கூடிய வேளாளர்களிடமும், கருப்பருக்கு உரியவற்றை பூசாரியிடமும் ஒப்படைத்துவிடுகின்றனர்.

பங்காளிகள் அனைவரும் அருகில் உள்ள குளத்தில் குளித்துவிட்டு சாமி கும்பிட வருவர். முதலில் ஐயனாருக்கு தீபம் காண்பித்து வழிபட்டு விட்டு, பிறகு முன்னோடிக்கருப்பருக்கு பொங்கல் வைப்பது இவர்களின் வழக்கம்

பொங்கல் பானை வைக்கின்றதுபோது அரிமழம் நகரத்தார்களில் கணக்கு பார்ப்பவர்களும் ஒரு சில பங்காளிகளும் சேர்ந்து பொங்கல் பானை வைப்பது வழக்கமாக இருந்து வருகிறது. அதன் பிறகு

தீபாராதனை காண்பித்து வணங்கிவிட்டு சிறிது ஓய்வு எடுத்துக்கொண்டு கருப்பர் சந்நிதியில் குட்டி நிபந்தம் பார்த்து தாங்கள் கொண்டுவந்த ஆடு, கோழி ஆகியவற்றை முன்னோடிக்கருப்பர் பூசாரியிடம் ஒப்படைப்பார்கள்.

இதைப்போலவே ஐயனார் கோயிலிலும் குட்டி நிமித்தம் பார்த்து வேளாளர்களிடம் ஒப்படைப்பது வழக்கமாக இருந்து வருகிறது.

வேளாளர்கள் ஆடு, கோழி ஆகியவற்றைப் பலியிட்டுச் சமைத்து அதை தங்கள் பரம்பரையில் உள்ளவர்களுக்கு எட்டு பங்கு எடுத்துக்கொண்டு கணக்கு பார்ப்பவர்களுக்கும், மற்றும் தனியாக பூசை கொடுத்தவருக்கு பரம்பரை வழக்கப்படி ஒரு முட்டியில் (பானையில்) கறியும், ஒரு முட்டியில் கோழி இரசமும் கொடுப்பது வழக்கம். அதைக் கணக்கு பார்ப்பவர்கள் பெற்று காலை உணவு சாப்பிடுகிறபோது, பிரசாதமாக அனைத்து பங்காளிகளுக்கும் வழங்கவது வழக்கமாக இருந்து வருகிறது.

ஐயனாருக்கு முதலில் அபிடேகங்கள் நடைபெறும், பின்னர் மற்ற கோயிலின் உட்புறத்தில் உள்ள அனைத்துத் தெய்வங்களுக்கு தீபஆராதனை காண்பிக்கப்படும் பெரியகருப்பருக்கு அபிடேகம் நடைபெறும், அங்கு குட்டி நிமித்தம் பார்த்து படையில் இடுவது வழக்கமாக இருந்து வருகிறது. அர்ச்சனை செய்கின்ற போது

எத்தனை அர்ச்சனை செய்கிறாரோ ஒரு அர்ச்சனைக்கு ரூ. 2 வீதம் அவர்களுக்கு (வேளாளர்களுக்கு) காணிக்கை கொடுக்கப்படும் வழக்கம் இருந்து வருகிறது.

பிறகு, முன்னோடிக்கருப்பருக்கு அலங்காரம் செய்யப்பட்டு தீபம் காண்பிக்கப்படும். அப்போதுதான் சந்நிதியின் முன்பு பதிமூன்று பள்ளயம் போட்டு, நகரத்தாகள் அனைவரும் இறைவனை வணங்கி அருள்பெறுவார்கள்.

அரிமழம், நேமத்தான்பட்டி நகரத்தார்கள் கிட்டதட்ட 1997-க்கு முன்பு சுமார் இருபத்தியிரண்டு வருடங்கள் சி.மு.நா. முத்துவீரப்பன் (எ) சீனிவாசன் செட்டியார் தான் கணக்கு பார்த்து இருக்கிறார். தற்போது புள்ளிகள் பெருகிவிட்ட காரணத்தால் 1997க்கு பிறகு வருடம் ஒரு குடும்பம் பார்ப்பது என தீர்மானிக்கப்பட்டு அதன்படி, இப்போது ஆண்டுதோறும் ஒரு குடும்பம் கணக்கு பார்த்து வருகிறார்கள்.

அரிமழம், நேமத்தான்பட்டி நகரத்தார்கள் வெள்ளிக்கிழமை இரவு இறைவனை வணங்குகின்ற போது முன்னோடிக் கருப்பருக்கு வெள்ளியங்கி சார்த்தி வழிபடுவது வழக்கமாக உள்ளது. இதன்பின் இவர்கள் அரிமழம் திரும்பிவிடுகிறார்.

அரிமழத்தில் படைப்பு

இவ்வழிபாட்டைத் தொடர்ந்து அடுத்ததாக வரும் சனிக்கிழமை அன்று அரசுமுகம் படைப்பு மதிய வேளையில் நடைபெறுகிறது. அப்போது அரசுமுகம் என்ற வேலுக்குப் பாச்சோறு பொங்கி வழிபடுவது வழக்கம். அன்று' இரவே பெரியகருப்பருக்கு படைப்பு, ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது.

அன்று சின்னகருப்பருக்கும் படைப்பு உண்டு. இவ்வழிபாடு பலவான்குடி படைப்பில் இருந்து வேறுபட்டதாகும். ஞாயிற்றுக்கிழமை இரவு கன்னிமாபெண்களுக்கு – பணியாரப் படைப்பு என்பது நடைபெறுகிறது.

திங்கட்கிழமை அன்று மதியம் அழகாத்தாள் படைப்பு என்று வெள்ளி முதல் திங்கள் மதியம் வரை அனைத்து பங்காளிகளும் ஒன்று கூடி படைத்துக் கொள்கின்றனர். இத்தெய்வம் அரிமழம் வழியினரின் மூதாதையராக இருக்க வேண்டும்.

தங்கள் உறவை மேம்படுத்தவும், தங்கள் தொழில் வளம் பெறவும், அனைவரும் எல்லாநலமும் பெற்று நல்வாழ்வு வாழவேண்டும் என்றும் அனைவரும் இறைவனை வழிபடுகின்ற இப்படைப்புமுறை மிகவும் சாலச்சிறந்ததாகும்.

முடிவுகள்

- செங்கீரையில் உள்ள தலைக்காவுடைய ஐயனார், பெரிய கருப்பர், முன்னோடிக் கருப்பர் ஆகிய தெய்வங்கள் தனித்த வழிபாட்டு முறையைக் கொண்டுள்ளன.

- உயிர்ப்பலி இடுதல் மிக முக்கியமான நடவடிக்கையாக உள்ளது. கோயில் வழிபாட்டிலும், படைப்பு வீட்டு வழிபாட்டிலும் இது முக்கியத்துவம் பெறுகிறது.

- ஊர்மக்கள் புரவி எடுத்து வழிபடும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர்.

- நகரத்தார்கள் படையல் இட்டு வழிபடும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர்.

- பலவான்குடியில் ஐம்பொன் சிலை வைத்துப் பெரிய கருப்பர் வணங்கப்படுகிறார். இவருக்கென தனித்த படைப்பு வீடும் உள்ளது. ஆண்டுக்கு ஒரு முறை இவருக்கும் மற்றும் உள்ள செங்கீரை தெய்வங்களுக்கும் படைப்பு நிகழ்த்தப் படுகிறது.

- அரிமழம் நேமத்தான் பட்டி நகரத்தார்களும் தனித்த வணங்கும் முறையைக் கொண்டுள்ளனர். இவர்கள் படைப்பு முறை பலவான்குடிப் படைப்பில் இருந்து மாறுபடுகிறது.

- செங்கீரை 'தெய்வங்கள் குறித்து மக்களிடம் நல்ல நம்பிக்கைகள் உள்ளன. அவை அவர்களின் வாழ்வை நம்பிக்கை உடையதாக ஆக்குகின்றன.

முடிவுகள்

செங்கீரை தலைக்காவுடைய ஐயனார், முன்னோடிக் கருப்பர் கோயில்கள் ஓர் ஆய்வு என்னும் பெயரியதான இவ்வாய்வில் கண்டறியப்பட்ட முடிவுகள் பின்வருமாறு.

1. புதுக்கோட்டை மாவட்டம் பல வரலாற்றுச் சின்னங்களுக்கும், பல தெய்வத் தலங்களுக்கும் சிறப்புடைய மாவட்டம் ஆகும்.

2. இம்மாவட்டத்தில் உள்ள சிறு தெய்வ வழிபாடுகள் எண்ணற்றவை. அவற்றுள் குறிக்கத்தக்கன செங்கீரை என்னும் ஊரில் உள்ள தலைக்காவுடைய ஐயனார் மற்றும் முன்னோடிக் கருப்பர் ஆகிய தெய்வங்கள் ஆகும்.

3. செங்கீரை கிராமத்தில் உள்ள கிராம மக்களும், நகரத்தார் குல மரபில் வயிரவன்பட்டி பெரிய வகுப்பைச் சார்ந்த மக்களும் மாத்தூர் அரும்பாக்கூர் பிரிவினைச் சார்ந்த மக்களும் இத்தெய்வங்களைத் தங்கள் குல தெய்வமாகக் கொண்டுள்ளனர்.

4. செங்கீரை என்னும் கிராமம் தன் மண் நிறத்தாலும், அங்கு வழங்கும் நாட்டுப்புறக் கதையாலும் பெயர் பெற்ற கிராமம் ஆகும்.

5. இக்கிராமத்தில் உள்ள இவ்விரு தெய்வங்கள் தவிர தலைக்காவுடைய ஐயனார் கோயிலில் உள்ள பெரிய கருப்பர் தெய்வம் தனித்த நிலையில் வணங்கப் பெற்று வருகிறது.

6. இக்கோயில்கள் தவிர அடைக்கலங்காத்தாள் கோயில், சிவன் கோயில் ஆகியனவும் இவ்வூரில் உள்ளன. எனினும் சிறுதெய்வமான தலைக்காவுடைய ஐயனாருக்கும், முன்னோடிக் கருப்பருக்கும் உள்ள பெருமை அதிகம்.

7. தலைக்காவுடைய ஐயனார் கோயிலில் தலைக்காவுடைய ஐயனார் இருதேவியரோடும் காட்சி தருகிறார். மேலும் அவர் கையில் முனைமழுங்கிய கத்தி போன்ற கருவியோடு அமர்ந்த நிலையில் வடிவமைக்கப் பெற்றுள்ளார்.

8. முன்னோடிக் கருப்பர் நெடிய தோற்றத்துடன் கையில் கத்தியோடும் சுக்குமாந்தடியோடும் காட்சி தருகிறார்.

9. இவ்விரு தெய்வக் கோயில்களும் தனக்கென தனித்த கோயில் அமைப்புகளைப் பெற்றுள்ளன. தனித்த வழிபாட்டு முறைகளைப் பெற்றுள்ளன.

10. ஊர்மக்கள் புரவி எடுத்து இத்தெய்வத்தைக் கும்பிடுகின்றனர். நகரத்தார் தலைக்காவுடைய ஐயனார் கோயிலில் உள்ள பெரிய கருப்பருக்கு படைப்பு செய்து வழிபடுகின்றனர்.

11. அரிமழம், பலவான்குடி ஆகிய ஊர்களின் நகரத்தார் பெருமக்கள் இப்படைப்பினைச் செய்து வருகின்றனர்.

12. பலவான்குடியில் தனிப் படைப்பு வீடு அமைக்கப் பெற்றுள்ளது. இவ்வீட்டில் பெரிய கருப்பரின் ஐம்பொன் சிலை நிறுவப் பெற்றுள்ளது.

13. இச்சிலைக்கு அபிடேகம், வழிபாடு, படையல் ஆகியன நிகழ்த்தப் பெறுகின்றன. இப்படையல் ஆடிமாதம், பௌர்ணமிக்கு அடுத்த வெள்ளிக்கிழமை தொடங்கப் பெறுகிறது. அது தொடங்கி திங்கள், செவ்வாய் ஆகிய நாட்களில் இவை நடத்தி முடிக்கப் பெறுகின்றன.

14. அரிமழம் ஊர் நகரத்தார்கள் செய்து வரும் படைப்பு முறையும் இதனோடு ஓரளவிற்கு ஒத்து: செல்லக்கூடியது என்ற போதிலும் இதற்கும் முன்னதற்கும் சில வேறுபாடுகளும் உண்டு. அரிமழம் நகரத்தார்கள் செங்கீரைக்கு வந்து வழிபாடு செய்வதில் அதிக கவனம் செலுத்துகின்றனர். மேலும் தங்கள் தெய்வமான

அழகத்தாளையும், இணைத்து இதனோடு வழிபடுகின்றனர். எனவெ இப்படைப்பு ஏறக்குறைய நான்கு நாட்கள் நடைபெறுவதாக உள்ளது.

15. இத்தெய்வங்களுக்கு பலியிடல் என்பது குறிக்கத் தக்க வழிபாடாக உள்ளது. அதாவது ஆட்டுக்குட்டி, சேவல் (கூவியது, கூவாதது) என்ற உயிரினங்கள் பலியிடப் படுகின்றன.

16. இத்தெய்வங்கள் வ்லிமை வாய்ந்த தெய்வங்களாக உள்ளன. இவற்றிற்கு வழிபாடு நிகழ்த்துவதன் மூலம் தம் வறுமை, துன்பம் ஆகியன கழியும் என மக்கள் எண்ணுகின்றனர்.

17. மேலும் புதிய வாகனம் வாங்கினால் இத்தெய்வத்தை வணங்கி அவ்வண்டியை ஓட்டிச்செல்வது மக்கள் வழக்கமாகும்.

18. குழந்தைப்பேறு வேண்டியும் குடும்பத்தைக் காக்க வேண்டியும் இத்தெய்வங்களை மக்கள் வணங்கி வருகின்றனர்.

19. இவ்வாறு செங்கீரை சிறுதெய்வங்கள் வலிமையிலும், அருளிலும் சிறந்தனவாக உள்ளன.

<u>துணைநூற்பட்டியல்</u>

1. இராமசாமி, வே., பெரிய கருப்பண்ணசாமி படைப்பு மலர், வேல் வெளியீடு, கோயம்புத்தூர், ஆகஸ்டு 2004

2. எஸ்ஸார்எம், நகரத்தார் குலதெய்வங்கள் 108,மலேசியா, முதல்பதிப்பு

3. கழகப் புலவர்குழு, கழகத் தமிழ் அகராதி, சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை.

4. முத்துக்குமாரி, தடிகொணட் ஐயனார் கோயில் ஓர் ஆய்வு அச்சிடப்படாத முதுகலை ஆய்வு, மா. மன்னர் கல்லூரி, புதுக்கோட்டை, பிப் 2007

5. வேலப்பன்,வே. வே. வே புலவர், பலவான்குடி பெரியகருப்பண்ண்சாமி படைப்பு மலர், விசாலாட்சி பிரிண்டிங் பிரஸ், சென்னை, 2001

பின்னிணைப்பு 2

புகைப்படங்கள்

தலைக்காவுடைய ஐயனார் கோயில் தோற்றம்



பெரியகருப்பர்



சின்னக் கருப்பர்



வெளிப்பகுதியில் உள்ள காளி

முன்னோடிக் கருப்பர் ஆலயத்தின் நுழைவாயில்



சேமங்குதிரை



முன்னோடிக்கருப்பர்



பலவான்குடி படைப்பு வீட்டில் உள்ள பெரிய கருப்பர்



மற்ற தெய்வங்களுக்கான படையல்கள்





பின்னிணைப்பு 3

செங்கீரை அய்யனார் கோவிலின் வரைபடம்



1. சேமங்குதிரைகள்,
2. ஆலமரம், நொண்டி, காளி, முனி
3. ஐயனார் கோயில் நுழைவாயில்
4. வெளிப்புறச் சுற்றுச்சுவர்
5. கோயிலின் உட்பகுதியில் உள்ள செட்டிச்சி, கருப்பாயி, பேச்சி
6. பெரிய கருப்பர்

7. சின்னக்கருப்பர்
8. அகோர வீரபத்ரசாமி
9. சித்தி விநாயகர்
10. அரசுமுகம், சன்னாசி
11. கன்னிமார் பெண்கள்
12. தண்டாயுதபாணி
13. மூலவரின் கோபுரம்

செங்கீரை முன்னோடிக் கருப்பர் ஆலயத்தின் வரைபடம்



1. நுழைவாயில்
2. படிகள்
3. சேமங்குதிரை
4. தங்குமிடம்
5. கம்பி போட்ட பாதுகாப்பு வேலி

6. அய்யனார் கோயிலுக்குச் செல்லும் வழி
7. மண்டபம்
8. தூண்கள்
9. அரசமுகம், காஞ்சினமரம்
10. மூலவர்
11. வீரமரம்ஸ
12. ஊருணிக்குச்செல்லும் வழி
13. அடுப்பு
14. ஊரணி
15. பிள்ளையார்கோயில்

பலவான்குடியில் படைப்பு வீட்டின் வரைபடம்



1. நுழைவுப் படிக்கட்டு
2. காலி இடம்
3. பட்டாலை
4. தனி அறை
5. வளவு
6. சைவ சாப்பாடு நடைபெறும் இடம்
7. மூல விக்ரஹம்
8. அசைவச் சாப்பாடு நடைபெறும் இடம்
9. வெளியில் செல்லுவதற்கான வழி மற்றும் சமைக்கக்கூடிய இடம்
10. தனி அறை

2, 3 க்கு இடைப்பட்ட வழி தனி அறைக்கு மற்றும் சாப்பாடு நடைபெறும் இடத்திற்குச் செல்வதற்கு ஆகும்.

6. அய்யனார் கோயிலுக்குச் செல்லும் வழி
7. மண்டபம்
8. தூண்கள்
9. அரசமுகம், காஞ்சினமரம்
10. மூலவர்
11. வீரமரம்ஸ
12. ஊருணிக்குச்செல்லும் வழி
13. அடுப்பு
14. ஊரணி
15. பிள்ளையார்கோயில்